தென்மொழி

RECEIVED

இலங்கைச் செலவு : (உள்ளே)

சுவடி : 15 ஓலை : 1. விலை : உரு. 1.

அமர்ந்திருப்போர் : பண்டிதர். திரு. கா. பொ. இரத்தினம், பா. உ. பெருஞ்சித்திரனார், திரு. அமிர்தலிங்கம், பா. உ.
நிற்போர் : திரு. யோகீசுவரன், பா.உ. கோவை. மகேசன்.

நமக்கு வந்த மடல்கள்.

0:587: அன்பின் ஐயா, தாங்கள் ஈரோடு திருக்குறட் பேரவையில் (16-4-78) நிகழ்த்திய உரையினை அங்காந்த நிலையில் அருகிருந்து கேட்டேன். திருக்குறளில் நுனிப்புல் மேயும் என் போன்றவர்களுக்கு அதன் ஆழத்தையும, விரிவையும். நுட்பத்தையும் எந்த ஒரு பேச்சாளரும் இதுபோல் விளக்கியதில்லை. "எண் பொருளவாகச் செலச் சொல்லும்" திறமைக்குத் தங்களது உரையே எடுத்துக்காட்டு. மூன்று மணிநேர உரை முற்றுப்பெற்ற பின்னரும் தாங்கள் தங்கியிருந்த விடுதியில் அன்பர்கள் சூழ்ந்திருக்கக் கண்துஞ்சாது விடியவிடியக் கலந்துரையாடினீர்கள். "திருந்தாத தமிழகத்தின் திறனுய்வையே" அன்று தங்களது வாயிலாகக் கேட்டேன். அப்போது பொழுதும் விடிந்து விட்டது! இனித் தமிழகம் விடிவது எப்போது, என்ற ஏக்கத்தோடு தங்களிடம் விடை பெற்றேன்.

—புலவர்: வில்லவன். க.மு: கூவலூர்.

0:588: உயர்திரு பாவலரேறு ஐயா அவர்கட்கு, அனைத்து நலனும் வளமும் பெற்றுப், பேரகவை பெற்று நீவிர் நீடுவாழ வேண்டுமென யான் வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். பண்பாடு என்பதை அறியாதிருந்த என் போன்ற பல தமிழர்களின் கண்களைத் திறந்துவிட்ட ஏந்தலே! நான் ஒரு கடவுள் மறுப்பாளன் (நாத்திகன்), ஆனால் இந்த நாத்திகனும் ஓர் இறைவனைக் கண்டு கொண்டான். ஆம், அறியாமையென்னும் போர்வையில் புதைந்து கிடந்த இத் தமிழினத்தைக் கடைதேற்ற வந்திருக்கும் தாங்கள்தாம் என் கடவுள்! தாங்கள் தாம் என் குரிசில்! தாங்கள்தாம் என் வழிகாட்டி!

தென்மொழி படிப்பதற்கு முன்பெல்லாம் 'தமிழ்' என்பது வெறும் ஆவலற்ற—சாறற்ற—சொல்லாகவே தான் இருந்து வந்தது; தென்மொழி படித்துத்தான் அதன் மாபெருமை எனக்குப் புரிந்தது. படித்த முட்டாள்கள் நிறைந்த இந்நாட்டில் தென்மொழி மம்மராறுக்கும் மருந்தாக இருக்கிறது. தென்மொழி போல் பயனுள்ள நூல்களை ஈண்டு இந்நாட்டில் யான் காண்கிலேன். ஈண்டு புதிதாக வரும் நூல்களும் புறவாழ்க்கையினை அணி செய்வனவாயும், பாலுணர்வைத் தூண்டுவனவாயும் இருக்கின்றன. இதில் துயரம் என்னவெனில் தமிழர்கள் அவ்வேடுகளை விரும்பி வாங்குவதுதான், இதுதான் இற்றைய தமிழரின் இழிநிலை! நிற்க.

இத்துடன் என்னுடைய தாழ்மையான கருத்தைத் தங்களிடம் தெரிவிக்க ஆவலுற்றேன். அஃதென்னவெனில், தென்மொழியில் பல்லியல் கட்டுரைகள் வெளிவர வேண்டுமென்பதே. அறிவியல், வரலாற்றியல், நிலவியல், உளவியல், மருத்துவ இயல், கோட்பாட்டியல் [தத்துவ இயல்]; வான இயல், விலங்கியல் போன்ற அறிவு கொளுத்தும் கட்டுரைகள் நிறைய வேண்டுமென்பதே. இப்போது தென்மொழியில் வரும் 'உலகியல் நூறு' செய்யுளுக்கு ஈடாக எதையும் கூறும் திறனற்றேன் யான். இஃது உயர்வு நவிற்சி அன்று; இயல்பு நவிற்சியே. அச்செய்யுளின் ஒவ்வொரு கருத்தும் நுண்மாண் நுழைபுலம் மிக்கதாயும், தங்கள் அறிவை விளக்குவதாயும் இருக்கின்றது. உங்களை யான் மிகவும் விரும்புகிறேன்; பற்று

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

'கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர் நின்றே!

சுவடி: 15 ஓலை: 1.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி
இலக்கிய இதழ்

ஆடவை தி. பி. உ00க-சூன்-1978.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர்: மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்.
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

'செந்தமிழ்ச் செல்வி'க்கு உட்கரணம் கெட்டதா?

மொழிஞாயிறு. ஞா. தேவநேயப்பாவாணர்
(நெறியாளர். தமிழக அரசுச்
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்துறை.)

தமிழ் நாட்டிற் பொதுவாக முதுவேனிற் காலத்தில் தாங் கொணு வெப்பமிக்கு,

''வேனலங் கிழவெனுடு
வெங்கதிர் வேந்தன்
தானலந் திருகத்தன்மையிற் குன்றி
முல்லை யுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங்'' கொள்ள,

மருத நெய்தலையும் வாட்டி வருத்துவது தொன்று தொட்ட மரபே ஆயின் கடந்த வேனிலில் ஏனையோர்க் கெல்லாம் உடம்பு மட்டுமே தாக்குண்ண, தாமரைச் செல்வர், திரு. வ. சுப்பையா (ப்பிள்ளை) அவர்கட்கு உட்கரணமும் தாக்குண்டது மிகமிக இரங்கத்தக்கதாகும். இல்லெனில் கடந்த 'செந்தமிழ்ச் செல்வி (சிலம்பு: 52, பரல்: 9)-இல்

'தமிழில் பல துறை அறிவியல் நூல்களை ஆக்கும் முறை' என்னும் தலைப்பில் குழப்பமான, அறிவுக்குப் பொருந்தாத பல போலிக் கருத்து களை வெளிப்படுத்தியிரார்.

மேலையறிஞர் திங்கள் செவ்வாய் மண்டிலங்களையடுத்தும், மேலை மொழிகளில் புதுப்புதுப் பல்துறை அறிவியல் நூன்மணிகள் மேன் மேலுங் குவித்து வருவதும் ஏனையோரும் ஏற்கனவே அறிந்தனவே.

தமிழில் அறிவியற்கலைக் குறியீடுகள் போதிய அளவிற்கு ஆக்கப் படவில்லையென்பதும், அரசும் பல்கலைக் கழகங்களும் இதில் ஒரு சிறிதும் அக்கறை கொள்ளவில்லை யென்பதும், இந்நிலைமை நீடிப்பின் தமிழினம் இருளில் அழுந்தும் என்பதும், அறிந்தே உலகத்தமிழ்க் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதைத் தாமரைச் செல்வர் ஊக் கியதுமில்லை; அதன் மாநாடுகளில் உருக்காட்டியதுமில்லை.

பிற நாடுகளிற் கல்விவாயில் எம்மொழி யென்பதும், அதன் அமைப்பு எத்தகையது என்பதும், அந் நாடுகட்குச் சென்றுதான் அறிதல் கூடும் என்பதில்லை. ஞாலநூல் (geography), வரலாற்று நூல், மொழி நூல், செய்தித்தாட்கள் ஆகியவையே செவ்வனே அறி விக்கும்.

ஒருவர் ஓர் உயர்பதவியடைந்து விட்டதனால் திடுமென்று ஒரு பெரும் புத்தறிவு தோன்றி விடாது. [இவ்விடத்தில், உண்மையில் மதுரைப் பல்கலைக்கழகத் துணைக்கண்காணகர் (Vice-Chancellor) பதவியில் அமர்த்தம் பெற்ற பர்.வ.செ. குழந்தைசாமி அவர்கள் "ஆங்கிலத்தில் உள்ள அறிவியல் சொற்களை அப்படியே தமிழில் பயன்படுத்த வேண்டும்" என்னும் போலிக் கருத்தை வெளிப்படுத்தித் தமிழ் மாணவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்திய செய்தியைப் பொருத்திப் பார்க்க.] எக் கருமத்திற்கும் எத் தொண்டிற்கும் அதற்குரிய தகுதிகள் வேண்டும். தமிழ்த்தொண்டிற்குத் தமிழ்ப்புலமை, தமிழாராய்ச்சி, தமிழ்ப்பற்று ஆகிய மூன்றும் இன்றியமையாதன. ஓர் அறிவியல் துறையிற் பயிற்சி பெற்றவர் தமிழ்த்துறைக்குத் தகுதியுள்ளவ ராகார். பயிற்சித்துறை மாற்றிப் பணியமர்த்துவது, உழவனைத் தச்சு வேலைக்கும், தச்சனை நெசவுத் தொழிலுக்கும் அமர்த்துவது போன்றதே.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மட்டில், ஒருவர் தமிழ்ப் பற்றுள்ளவராகார். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகர முதலியைச் சீர் கெடுத்து, வளர்தமிழைத் தளரச் செய்த வையாபுரியாரும் ஒரு தமிழரே.

சமற்கிருத வெறியர்க்கும் பேராயக்கட்சியார்க்கும் பெரியாரைப் பின்பற்றுவோருட் பலருக்கும், தமிழ்ப்பற்றிருத்தல் இயலாது. தமிழ் ஒரு காட்டு விலங்காண்டிமொழி (காட்டு மிராண்டிப் பாஷை) என்று பெரியார் சொன்னதை மறந்து விடக் கூடாது.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்-ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

இத் தன்னேரிலாத தமிழின் இரு சிறப்பியல்புகள் மென்மையும் தூய்மையும்-இவ்விரண்டும் நீங்கிவிடின், தமிழ் தமிழாகாது. மலையாளம் போல ஒரு கொடுங்கலவைத் திரவிட மொழியாக மாறிவிடும். அதன் பின் தமிழைப்பற்றிப் பெருமை பாராட்ட இம்மியும் இடமிராது இந்நிலைமையே தமிழ்ப்பகைவர் நீண்ட காலமாக எதிர்பார்ப்பது.

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனியியல்புண்டு. அது அதன் ஒலித் தொகுதியையும் சொல்லமைதியையும் பொறுத்தது. தமிழிலுள்ள முப்பதொலிகளே அதன் இயல்சிற்கேற்கும். அயலொலிகள் சேரின் அதன் இயல்பு கெடும். உலகில் தமிழ் ஒன்றே மெல்லோசை மொழி. பிறவெல்லாம் வல்லோசை மொழிகள். நொய்ய மெல்லாடையொடு திண்ணிய வல்லாடையை இணைத்தால், அவ்விணைப்பைத் தாங்காது மெல்லாடை கிழியும். அங்ஙனமே வல்லோசைப் பிற மொழிச் சொற்கள் சேரின், மெல்லோசைத் தமிழ் கெடும். வல்லியன் மேனியுள்ள ஆடவரை நோக்க, மெல்லியன் மேனியுள்ள பெண்டிர் பெரிதும் பெருமையும் பாராட்டும்பெறத் தக்கவரேயன்றி, இழித்துக் கூறப்படத் தக்கவரல்லர். அங்ஙனமே தமிழின் மெல்லோசை அதன் தனிச் சிறப்பைக் காட்டுவதே. தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவை முதலிய நூல்களை ஓதிக் காண்க.

ஒரு மொழிச் சிறப்பிற்கு இன்றியமையாது வேண்டுவது எல்லாக் கருத்துகளையும் தெரிவிக்கக் கூடிய சொல்வளமேயன்றி ஒலி வளமன்று. சில மரங்கள் கரந்து பூக்கும்; சில மரங்கள் வெளிப் படையாய்ப் பூக்கும். மரத்தின் பயன் கனியேயன்றிப் பூவன்று. பலா மரத்திற்கு வெளிப்படைப் பூவில்லையென்று, அதற்கு ஒருவரும் பூவொட்டக் கருதார். முக்கனிகளுள் ஒன்றுனதும் எல்லாவற்றிலும் பெரியதுமான அதன் நற்கனியே தேவையானது. அதுபோன்று, திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமான தமிழின் சொல் வளமே தேவையானதும் போதுமானதும் மாகும்.

ஆங்கிலம் சொல்வளமின்மையாற் பிறமொழிச் சொற்களை ஏராளமாகக் கடன் கொண்டது. அங்ஙனமே பிறமொழிகளும், ஓர்

ஏழை வணிகன் கடன்கொண்டு பயன்பெறலாம். ஆயின், பிர்லா போன்ற மாபெருஞ்செல்வர் கடன் கொள்ள வேண்டியதில்லை.

மேலை மொழிகளிலுள்ள அறிவியற் கம்மியக் குறியீடுகளையெல்லாம் மொழிபெயர்க்கப் போதிய கருவிச் சொற்கள் தமிழில் உள்ளன. யான் எழுதியுள்ள 'மண்ணில் விண்' என்னும் நூலின் இறுதியிற் காட்டப்பட்ட மொழிபெயர்ப்பு நெறிமுறைகளைக் கையாளின், எல்லாக் கலைச்சொற்களையும் இன்னும் பத்தாண்டிற்குள் தமிழில் ஆக்கிக் கொள்ளலாம்.

மேலைமொழிக் கலைச்சொற்களை அப்படியே கையாண்டு, தனித்தமிழை வளர்க்க வேண்டுமென்பது, ஒரு சிலரொடு மட்டும் பழகிக் கொண்டு ஒரு கன்னி தன் கற்பைக் காத்துக் கொள்ளலாம் என்பது போன்றதே.

மொழிகள் பெருமரங்கள். போன்று மெல்ல வளரிகள். செடிகொடிகள் போன்ற விரைவளரிகளல்ல. ஆங்கிலம் 5-ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ந்து வருகின்றது. நீராவிவலியும் மின்வலியும் கண்ட பின்னும், இற்றை வளர்ச்சியுற அதற்கு முந்நூற்றாண்டாகிவிட்டது. ஆகவே, தமிழ்க் கலைச்சொல் வளர்ச்சிக்கு இன்னும் பத்தாண்டு வேண்டுமெனபது மிகையாகாது. வகைவகையாய்ப் பல்வேறு தீங்கனிகள் பயக்கும் ஒரு மாந்தோப்பின் வளர்ச்சிக்குப் பல்லாண்டு செல்லும். அதுவரை பொறுமை இன்றியமையாதது. பிறமரங்களின் கிளைகளை வெட்டிக்கட்டி ஒரேநாளில் ஒரு புதுமரம் உண்டாக்க முடியாது. அது போன்றே மொழிவளர்ச்சியும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமும். திரு.வ. சுப்பையா (பிள்ளை) அவர்களும் தனித்தமிழை விரும்புவதாகப் பன்முறை விளம்பரஞ்செய்தும், இன்னும், 'மட்டிட்டது' என்பதை 'லிமிடெட்' என்றும், உரிச்சொற்றொகுதிகளிலுள்ள அறிவன், காரிஎன்னும்சொற்களைக் கையாளாது புதன், சனி யென்னும் வடசொற்களையே வழங்கியும் வருகின்றதை யாவரும் அறிவர்.

தாமரைச் செல்வர் திரு வ சு. அவர்கள் மறைமலையடிகளொடும் நம்மொடும் பழகியும், அடிகள் விழாவை ஆண்டுதோறும் கொண்டாடியும், எம் சொல்லாரய்ச்சிக் கட்டுரைகளைச் செல்வியில் வெளியிட்டும். கலவை மொழியை விரும்புவது,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மாற்றுந்தன்
உண்மை யறிவே மிகும்," என்னும் குறளுக்கே இலக்காகும்

மும்மொழிப் புலமை முற்றத் துறைபோகி அரும்பாடு பட்டு ஆரிய மறை பயின்று தனித்தமிழைத் தகைபெற நாட்டிய நிறைமலையாம் மறைமலையடிகளும், அரை நூற்றாண்டு சொல்லாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் செய்த யானும், திரு. வ. சுப்பையா (ப்பிள்ளை)யும், திரு.வ.செ. குழந்தைசாமியும் அறிந்ததாகக் கூறும் உண்மைகளை அறியாதவர்கள் அல்லர்.

என் இலங்கைச் செலவு.

---பெருஞ்சித்திரனார்.

1. இலங்கைச் செலவு வேட்கை.

என் சிங்கை மலையகச் செலவின் பொழுதே (1974-இலேயே) தமிழகம் திரும்புகாலை, இலங்கை சென்று வரவேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால் அதுபற்றி ஆழமாகக் கருதாமையால், அது கைகூடாமல் போய்விட்டது. அதன்பின் இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்த கொடுமைகளைச் செய்தித் தாள்களில் படிக்கும் பொழுதும், அங்கிருந்து வரும் அன்பர் வழியாக மனம் உருகக் கேட்கையிலும் 'உடனடியாக அங்கே போய் வருவமா; அங்குள்ள எந்தமிழ் மக்களைப் பார்த்து, ஒன்றுக்கும் நீங்கள் அஞ்ச வேண்டாம்; உலகெங்கணும் உள்ள தமிழினம் விழித்துக் கொண்டு விட்டது. இனி, எழுந்து செயலாற்ற வேண்டியதுதான் நடைபெற வேண்டும்; அந்த வகை முயற்சியும தொடங்கிவிட்டது என்பதற்கு நீங்கள் போராடும் போராட்டமே சான்று; எனவே, துணிநது போராடுங்கள்; நாங்களெல்லாரும் இங்கிருக்கின்றோம; தேவைப்படும் பொழுது கட்டாயம் குரல் கொடுப்போம்; இன்னும் வேண்டுமானால் துணைக்கும் வருவோம்' —என்று சொல்லி ஆறுதல் செய்து விட்டு வருவமா" என்று உள்ளம் நினைந்து மருகும். ஏனோ தெரியவில்லை அப்படியொரு பாசம் இலங்கைத் தமிழ் மக்கள் மேல் நிறைந்திருந்தது.

ஆனால் மலையகச் செலவுக்குப் பின் நான்காண்டுகள் கழித்தும் 1977 இலங்கை ஆகத்துக் கலவரத்திற்குப் பின்னும் அங்குப்போவதற்குரிய நேரமே ஒதுங்கவில்லை. யாழ்ப்பாண ஓவியரும் என் கெழுதகை நண்பரும் ஆகிய திரு. பெனடிக்டு அவர்கள், அவர் சார்ந்த 'இந்திய ஈழத் தமிழ்க் கலை, பண்பாட்டுக் கழகத்தின் சார்பில், விரைவில் தமிழீழத்தின் ஓர் எடுப்பான பகுதியில் அமைக்க விருப்பதாகக் கூறிய ஒரு கலைக்கோயிலின் அடிக்கல் நாட்டு விழாவிற்கு நானும் இன்னும் தமிழகத் தலைவர்களில் சிலரும், வரவேண்டியிருக்கும் என்று அடிக்கடி நேரிலும் மடல்கள் வாயிலாகவும் கூறிக் கொண்டிருந்தார். ஆனால் அதன் தொடர்பாகத் தவத்திரு. குன்றக்குடியடிகளார் தலைமையில் ஓரிரண்டு கருத்துக் கூட்டங்கள் நடத்தியதுடன் அம்முயற்சி தள்ளிப் போய்க் கொண்டிருந்தது. இனி, அண்மையில், மலேசியத் தென்மொழி அன்பர் திரு. இர.ந. வீரப்பன் தலைமையில் இயங்கும் உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முதல் மாநாடு சென்னையில் நடந்த பொழுது, அதிற் கலந்து கொண்டு கருத்தறிவிக்க வந்திருந்த தமிழீழ அன்பர்கள் 'அங்கு விரைவில் நான் வரவேண்டும்' என்று அழைப்பு விடுத்துவிட்டுச் சென்றார்களே தவிர, அதற்கான நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல் இருந்தார்கள், இடையில் நான் ஊரில் இல்லாத பொழுது

ஈழத்தமிழ் அன்பர் ஒருவர் நம் வீட்டிற்கு வந்திருந்து, விரைவில் அங்கு நடைபெற இருக்கும் தொழிலாளர் மாநாட்டிற்கு என்னையும் அழைக்க இருப்பதாகச் சொல்லிவிட்டுச் சென்றபின்னரும், இலங்கைச் செலவு வெறும் எண்ணமாகவே இருந்து கொண்டிருந்தது.

2. திருக்குறள் மாநாட்டிற்கான அழைப்பு

இந்நிலையில் தான், இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினரும், தென்மொழியின் தொடக்கக் காலத்தே (1959) அதனொடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவருமாகிய பண்டிதர். திரு கா.பொ. இரத்தினம் அவர்களிடமிருந்தும், சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்களிடமிருந்தும், மே மாத இறுதியில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழ் மறைக் கழகத்தின், பதினெட்டாவது திருக்குறள் மாநாட்டில், மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, சிறப்புச் சொற்பொழிவாற்ற வேண்டும், என்று அழைக்கும் முகத்தான் கீழ்க்காணும் மடல் வந்தது.

பேரன்புடையீர்,

..................எங்கள் தமிழ் மறைக் கழகத்தின் 18-ஆவது திருக்குறள் மாநாடு மேத் திங்கள் 20,21,22-ஆம் நாளகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இந்த மாநாட்டில் கலந்து சொற்பெருக்காற்றுவதற்த உங்களை அழைக்குமாறு அன்பர்கள் கேட்கின்றனர். உங்கள் தொல்லையைப் பொருட்படுத்தாமல் இங்கு வருதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து அறிவிக்குக... ...பத்து நாளாதல் இங்குத் தங்கிச் செல்லுதல் நன்று. உங்கள் இசைவுக் கடிதம் கிடைத்தவுடன் ஏனைய ஒழுங்குகளைச் செய்வோம......

வேலணை
22.4.78

அன்பன்,
கா.பொ. இரத்தினம்

இம்மடலுடனேயே 'சுதந்திரன்' ஆசிரியர் கோவை மகேசன் அவர்களும், 'தமிழ் ஈழத்தில் புங்குடுதீவு எனும் ஊரில் திருக்குறள் விழாவை நடத்திட, தமிழ்மறைக் கழகத்தினர் ஏற்பாடு செய்து வருகின்றனர். அதில் தாங்களும் கலந்து கொண்டு. சொற்பொழிவாற்றிட வேண்டுமென அவாவுறுகின்றனர். ....தாங்கள் திருக்குறள் மாநாட்டுடன் சேர்ந்து ஈழம் வருவதை நாம் அனைவரும் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்'' என்று ஒரு மடல் எழுதி இணைத்திருந்தார்.

பண்டிதர் அவர்கள் தமிழ் மறைக் கழகத்தின் தலைவர். திருக்குறளை உலகமெல்லாம் பரப்பும் முயற்சியில் அவர் ஆற்றிய, ஆற்றி வருகிற

பணி அளவிடற் கரியது. உலகெங்கணும் இக்கால் திருக்குறள் ஆண்டைப் பயன்படுத்தவும், திருக்குறள் விழாக் கொண்டாடவும் செய்யப் பெறுகின்ற பெருவழக்கிற்கு அவரின் அரும் பெரும் முயற்சி களே அடிப்படையாக விருந்தன என்பதை இன்றுள்ள பலரும் அறியார். அந்த அளவிற்கு அவர்கள் உலகெங்கணும் உள்ள தமிழர் களுக்கு ஓயாமல் மடல்கள் எழுதியும் அறிக்கைகள் விடுத்தும், போராடி யும், நேரிடையாகப் பல செயல்களைச் செய்தும் அரும்பாடு பட்டிருக் கின்றார்கள்.

தமிழர்களிடையே உள்ள பலவகைக் குறைபாடுகளில் ஒன்று நன்றி மறப்பது. திருக்குறளில் நன்றி மறவாமை என்னும் அதிகாரம் எழுதப் பெறுவதற்கே இந்தக் குறைதான் கரணியம். இனி, நன்றி மறப்பதுடன் தொடர்புடைய தாழ்ந்த குணம் ஒன்றுண்டு. அதுதான் ஒருவர் முயன்று தொடங்கிய ஓர் அரும் பெரும் பொது முயற்சியை இடையில் வந்த ஒருவர், தம் பெயருக்கும், புகழுக்கும் அடிப்படை யாகப் பயன்படுத்திக் கொள்வது. ஏன், தட்டிப் பறித்துக் கொள்ளும் அளவுக்கு அஃது ஒரு கொடுமையான செயலாகவே பின்பற்றப் பட்டு வருகிறது. இதற்குக் காலஞ்சென்ற ஈழத்தடிகள் என்னும் ஈழத்துச் சிவானந்த அடிகள் அரும்பாடு பட்டுத் தொடங்கித் தூக்கிய இந்தி யெதிர்ப்பியக்கக் கொடி தக்க சமயத்தில், அவர்கள் கைகளினின்று பறிக்கப் பட்டுப் பிறர் கைகளுக்கு மாறி, ஒரு பெரும் வரலாறு உருவா வதற்கே கரணியமாக அமைந்ததை ஒரு நல்ல எடுத்துக் காட்டாகச் சொல்லலாம். ஒரு முயற்சியை ஒருவருக்குப் பின்னாக மற்றொருவர் தொடர்ந்து செய்வது என்பது வேறு, செய்து கொண்டுள்ள ஒருவரைத் திரைக்குப் பின் தள்ளி விட்டு விட்டுத் தம் பெயரும் புகழும் வெளிப்படுமாறு, தாமே அதைப் பறித்துக் கொள்ளுவ தென்பது வேறு. இந்த இரண்டாம் வகை சூழ்ச்சிக்கு இலக்காகி இன்று திரைக்குப் பின் தள்ளப்பட்டுப் போனவர்களுள் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களும் ஒருவர் எனில், அது மிகையான கூற்றாக இருக்க முடியாது.

3. பண்டிதர் கா.பொ. இரத்தினம் அவர்களின் திருக்குறள் தொண்டும் சிறப்பியல்களும்.

பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் க.மு., கீ.க.தே. அவர்கள், இத் தமிழ்மறைக் கழகத்தை 1952-இல் நிறுவினார். அதன் பின், திருக்குறள் திருநாளைக் கொண்டாடவும் ஆண்டுதோறும்



கா.பொ. இரத்தினம்.

உலகில் உள்ள தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ்க் கழகங்களுக்கும், தமிழ்த் தாளிகைகளுக்கும், அவர் விடுத்த அறிக்கைகளும் வேண்டுகோள்களும் பலவாகும். அவ்வறிக்கைகளிலெல்லாம், திருக்குறள் திருநாள் கொண்டாடவும், அந்நாளை அவ்வந் நாட்டு அரசுகள் விடுமுறைகளாக விடவும், திருக்குறளை இதுவரை மொழி பெயர்க்கப் படாதிருக்கும் மொழிகளில் பெயர்க்கவும், அதன் அருமை பெருமைகளைச் சொற்பொழிவுகள், நூல்கள் வாயிலாகப் பெருக்கி யாவரும் அறியச் செய்யவும், திருக்குறள் மூலத்தையும் உரைகளையும் அச்சிட்டு அடக்க விலைக்கு விற்கவும் திருக்குறள் தொடர்பான நூல்களைத் தொகுத்து ஆங்காங்கே நூலகங்கள் நிறுவவும், திருக்குறள் மாநாடுகளைப் பல்வேறிடங்களில் நடத்தவும், திருக்குறள் வகுப்புகள் தொடங்கவும், திருக்குறளில் தேர்வுகள் நடத்திப் பரிசில்கள் தரவும் வேண்டுகோள்கள் விடுத்தார். தமிழ் மறைக் கழக உறுப்பினர்களாக உலகெங்கணும் உள்ள அறிஞர்களையும், ஆர்வமுள்ள தமிழன்பர்களையும் இணைத்தார். செய்தித் தாள்கள், வானொலி நிலையங்கள், சங்கங்கள், மன்றங்கள், கழகங்கள், கல்விச் சாலைகள் முதலியவற்றை அத்திருக்குறள் நாட்குறிப்பு, நாட்காட்டி, ஐந்துறுப்பியம் (பஞ்சாங்கம்) முதலியவற்றில் திருக்குறள் ஆண்டைக் குறிக்கவும் அறிக்கைகள் வாயிலாகக் கேட்டுக் கொண்டார்

1935 மேத்திங்கள் 18, 19ஆம் நாட்களில் சென்னையில் திருவள்ளுவர் திருநாட் கழகச் சார்பாக, நடந்த திருக்குறள் மாநாட்டில் கலந்து கொண்ட தமிழகப் பேரறிஞர்களாகிய மறைமலையடிகள், பர். உ.வே. சாமிநாதர், திரு.வி.க, துடிசைக் கிழார் அ. சிதம்பரனார், கா. நமசிவாயர், பெரியார் ஈ.வே.இரா, அறிஞர் அண்ணா, டி.கே.சி, இராசாசி, பி.டி. இராசன் முதலியோர் விடுத்த வேண்டுகோள்களையும், கருத்துகளையும் அறிக்கைகள் வாயிலாக உலகோர் அறியச் செய்து, அவற்றைச் செயற்படுத்தக் கேட்டுக் கொண்டார். இவர் வேண்டுகோளை அன்றைய (1954) தமிழ் ஏடுகளான செந்தமிழ்ச் செல்வி,

(தொடர்ச்சி 25-ஆம் பக்கம்)

தமிழ் வளர்ச்சிக்கு அரசு செய்ய வேண்டுவன

பன்மொழிப்புலவர்: இரா. மதிவாணன்.க.மு.

உயிர் ஓருடம்பை இயக்குகிறது. மொழி கோடிக்கணக்கான மக்களை ஒருங்கிணைத்து ஒன்றித்து ஒருடம்பாக ஓரினமாக வாழச் செய்வதால் நாட்டுக்கும் மக்களுக்கும் பொதுவான ஒரே உயிராக விளங்குகிறது. மொழியைக் காப்பதும் வளப்படுத்துவதும் மக்களின் உயிரைக் காத்து வளப்படுத்துவதாகும். ஆதலால், மொழிநலம் கெடாமல் காப்பதும் மொழிவளர்ச்சியில் தேக்கமேற்படாதவாறு ஊக்குவதும் அரசின் கடமைகளாகின்றன. அரசின் உதவியை முழுமையாகப் பெற்ற ஆங்கிலம் சமற்கிருதம் போன்ற மொழிகள் நன்கு வளர்க்கப் பட்டுள்ளன. மொழி குழந்தையெனின் அரசின் ஆதரவு தாய்ப்பால் போன்றது. தமிழ்க்குழந்தை பசியாறத் தாய்ப் பால் குடித்து 1800 ஆண்டுகளாகின்றன. சமற்கிருத குழந்தை ஒன்றே பிற குழந்தைகளை அண்ட வொட்டாமல் இதுவரை தாய்ப் பாலைத் தனித்துப் பருகிச் செழுமையாக வளர்ந்துள்ளது. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் சமற்கிருதச் சுவடிகள் 30377 திரட்டி வைக்கப்பட்டிருப்பதும் தமிழ்ச்சுவடிகள் வெறும் 2081 திரட்டி வைக் கப்பட்டிருப்பதுமாகிய எண்ணிக்கையே இதனை வெளிப்படக் காட்டும்.

செழித்து வளர்ந்த சமற்கிருதக் குழந்தை மேலும் பாலுக்கு அழுது கொண்டிருக்கிறது. அழுது ஓய்ந்து அழுவதையே மறந்து விட்ட தமிழ்க்குழந்தை இந்த நூற்றாண்டில்தான் தாய்முகத்தைக் காணும் பேறு பெற்றிருக்கிறது. தான் பெற்ற குழந்தையைத் தமிழக அரசு என்னுந்தாய் அரவணைத்துக் கொண்டிருக்கிறாள். தாயின் அரவணைப்பும் ஆசைமொழியும்மட்டும் போதா. குழந்தையின் நலிவும் மெலிவும் நீக்கிப் பொலிவு காண ஏற்ற வகையில் ஊட்டந் தரவேண்டும். அதற்கான வழி வகைகளுட்சில:

1) தமிழக வரலாறு முறையாக எழுதப்பட வேண்டும்என்று அரசு விரும்புவது வரவேற்கத்தக்கது. வரலாறு எழுத மூலமாக இருப்பவை கல்வெட்டுகளும் பட்டயங்களும். தமிழகத்தில் இதுவரை 45,000 கல் வெட்டு பட்டயம் முதலியவை திரட்டிருப்பதாகவும் அவற்றுள் 5000 மட்டும் வெளியிடப் பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆதலால் எஞ்சியவற்றை முழுமையாக வெளியிட அரசு விரைந்த நடவடிக்கை

எடுத்தாலொழிய தமிழக வரலாற்றைச் செம்மையாக எழுதுவது நிறைவாக இருக்காது. கருநாடக மாநிலத்தில் 10000 கல் வெட்டுகள் வெளியிடப்பட்டிருப்பதால் அவர்களுடைய கன்னட அகர முதலித் தொகுப்புக்கு அது பெரிதும் பயன் பட்டிருக்கிறது. இதுவரை திரட்டப்பட்டுள்ள பல்துறை ஓலைச் சுவடிகளும் நூல் வடிவம் பெற அரசு ஊக்கமும் உதவியும் புரியவேண்டும்.

2) சிந்து வெளி அகழ்வாரய்ச்சி வெள்ளையர் காலத்தில் மேற் கொள்ளப்பட்டது. தென்னகத்தில் அத்தகைய பெருமுயற்சி இது வரை மேற்கொள்ளப்படவில்லை, பூம்புகார், நாகை, கொற்கை, தொண்டி, முசிறி போன்ற துறை நகரங்கள் இருந்த இடங்களிலும் குமரிக்குத் தெற்கிலும் கடலக அகழ்வாரய்ச்சியாளரும் நில அகழ் வாராய்ச்சியாளரும் இணைந்து ஆய்வு நடத்த அரசு முயற்சி மேற் கொள்ள வேண்டும். கல்கத்தாவிலுள்ள கடலக அகழ்வாராய்ச்சித் (Marine archaeology) துறையினரை இப்பணியிலீடுபட ஊக்க வேண்டும். இந்த ஆய்வுகள் நிறைவுறின் தமிழக வரலாற்றை தி.மு 5000 முதல் தொடங்கி எழுதத்தக்க சான்றுகள் கிடைக்கக் கூடும்

3) தமிழின் இன மொழிகளான திரவிட மொழிகளாகவும் தமிழின் தாக்கம் பெற்ற மொழிகளாகவும் உலகனைத்தும் காணப்படும் மொழி களில் ஆய்வு நடத்தவும், உலகனைத்தும் தமிழக்கல்வி, தமிழ்ப்பண் பாடு, தமிழ்க்கலை உணர்வுகளை வளர்க்கவும் தமிழகத்தில் பெரிய அளவில் ஒரு **தமிழ்ப் பல்கலைக் கழகம்** நிறுவப்படல் வேண்டும். உலகின் பல்வேறு நாடுகளிலும் திரவிடமொழி குறித்து ஆய்வு செய் வார்க்கும் கற்பார்க்கும் இது தலைமை மொழியியல் நிலையமாக விளங்க வேண்டும். இதில் திரவிட மொழிக்கல்வியும், குறிப்பாகத் தென் திரவிட மொழிகளில் பட்டப்படிப்பும் தமிழ்ப்பண்பாடு, வரலாறு, மொழியியல் குறித்த ஆய்வும் இன்னோரன்ன பிற ஆக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பல்கலைக் கழகம் அமைய உலக நாடுகள்மன்றம், பிற நாடுகள், நடுவணரசு ஆகியவற்றின் பொரு ளுதவி கோடிக் கணக்கில் பெறவேண்டும்.

4) சமற்கிருதம் தொன்மையான மொழி என்பதற்காக அதன் வளர்ச் சிக்கு நடுவணரசு ஆண்டுதோறும் பெருந்தொகை ஒதுக்குகிறது. தமிழ் சமற்கிருதத்தை விடத் தொன்மையானது என்பது இருக்கு வேதத்தில் தமிழ்ச் சொற்கள் காணப்படுவதிலிருந்து ஐயமற நாட்டப்

படுகிறது. ஆதலால் சமற்கிருதத்தை விடத் தொன்மையான தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு சமற்கிருதத்துக்கு ஒதுக்குவது போல் இரு மடங்குத் தொகை ஆண்டுதோறும் ஒதுக்கநடுவணரசை தமிழக அரசு வற்புறுத்த வேண்டும். நடப்பாண்டில் தமிழகத்தில் சமற்கிருத அறிஞர் இருநூற்றுக்கு மேற்பட்டவர்க்கும் ஆந்திரத்தில் (சிற்றூர்க் கோயிற் பூசகர்க்கு 300 உருபாயும் பேரூர் பூசகர்க்கு 400 உருபாயும்) அனைத்து ஊர்களிலும் ஒவ்வொரு சமற்கிருத அறிஞர்க்கும் உதவித்தொகை கிடைக்கிறது. தமிழகத்தில் வறுமையில் வாடும் தமிழறிஞர் ஐவர்க்காயினும் அ.தி.மு.க. அரசு உதவ முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

5) பழந்தமிழிலக்கியங்களை விழுமிய உரைவிளக்கங்களுடன் மக்களிடையில் பரப்பும் வகையிலும் அச்சிடப்படாத பழந்தமிழிலக்கியங்களை வெளியிடும் வகையிலும் எந்த நிறுவனம் முன்வந்தாலும் 50 விழுக்காடு தொகை இலவசமாக அளிக்கப்பட்டு அந்நிலை மலிவுப் பதிப்பாக அடக்க விலையிலும் குறைத்து விற்க அரசு உதவ வேண்டும்.

பழந்தமிழ் நூல்களுள் சிறந்ததான கூத்துநூலின் இரண்டாம் மூன்றும் பகுதிகள் இதுவரை வெளிவரவில்லை. மிகச்சிறந்த சித்த மருத்துவ அகர முதலியான சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் ஆங்கில அகர முதலியின் நான்காம் மடலம் இதுவரை வெளிவரவில்லை, பழனி திருக்கோயில் அறக்கட்டளையின் கீழ் வெளிவருவதாக இருந்த சித்த மருத்துவ நூல்களும் வெளியிடப் பெறவில்லை. தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாத இந்நூல்களை விரைந்து வெளியிட தமிழக அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்வது மிகமிக இன்றியமையாதது.

கருநாடக அரசினர் பழங்கன்னட இலக்கியங்களை எளிய நடையில் மலிவுப்பதிப்பாக வெளியிடுவதற்கும் மலிவு விலையில் ஆயிரம் பக்கக் கன்னட அகரமுதலியை (மாணவர் பதிப்பு) ஐந்து உருபாய்க்கு விற்கவும் வெளியிட்டு மொத்த செலவில் 50 விழுக்காடு நன்கொடையளித்துள்ளது. கன்டைப் பேரகர முதலி 10,000 படிகள் அச்சிடச் செய்து அவற்றுள் 8,500 படிகளை அரசே விலைக்கு வாங்கி அனைத்துக் கல்வி நிறுவனங்கட்கும் நூலகங்கட்கும் அடக்க விலக்கு விற்றிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆந்திரப் பல்கலைக்கழகம் மாவட்டந்தோறும் ஆய்வு மாணவர்களை அனுப்பி, வேளாண்மை, நெசவு, கட்டடக்கலை, மீன்பிடிதொழில் போன்ற தலைப்புகளில் நாட்டுப்புறத் தொழிற்சொல் அகரமுதலிகளை (Dialect Dictionaris of occupation vocabulary) படவிளக்கங்களுடன், வெளியிட்டுள்ளது. தமிழில் நாட்டுப்புறத் தொழிற்சொற்கள் இதுவரை முறையாகத் தொகுக்கப்பட வில்லை. நாட்டுப்புறத் தொழிற்சொற்களுள்ளும் கல்வெட்டுச் சொற்களுள்ளும் பல, புதிய கலைச்சொல்லாக்கத்திற்கு உதவும். தமிழகப் பல்கலைக் கழகங்கள் இப்பணியிலீடுபட அரசு ஊக்கமும் உதவியும் தரவேண்டும்.

6) சாதிமத வேறுபாடுகளையும் கட்சி வேறுபாடுகளையும் மறந்து மக்கள் ஒன்று படுவதற்குத் தமிழ்ப்பற்றும் தமிழிலக்கியச் சொற்பொழிவுகளும் மிகவும் உதவும். ஆதலால் முதியோர் கல்விக்கூடங்கள் சிற்றூர் தொறும் தொடங்கப்பட்டு மக்களில் நூற்றுக்கு நூறு பேர்க்குத் தமிழறிவு ஊட்டுவதோடு படிப்பகங்களையும் தமிழிலக்கிய மன்றங்களையும் ஆங்காங்கு நிறுவவேண்டும். ஒவ்வொரு முதியோர் கல்விநிலையத்திலும் திருக்குறள் பரிசுத் திட்டம் நிறுவிக் குறளிலும் இலக்கியச் சொற்பொழிவுத்திறனிலும் வல்ல ஏழை எளியவர்க்குப் புத்தாடை பரிசளிக்க வேண்டும். முதியோரில் மகளிர்க்குத் தனிப் பரிசுகள் தரப்பட வேண்டும்.

7) கலைகளைப் போற்றும் வகையில் சிறந்த ஐந்து திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் பரிசளிப்பதாக அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்ப்பண்பாடு, வரலாறு தழுவிய திரைப்படங்களுக்குப் பரிசளிப்பதில் முதன்மை தரவேண்டும்.

8) நோபல் பரிசுத்திட்டம் போல் உலகனைத்துக்கும் பொதுவான பரிசுத்திட்டம் ஒன்று தொடங்கப்பட வேண்டும். உலகில் எந்நாட்டவராயினும் எம்மொழியினராயினும் திருக்குறள் கருத்துப் பொதிந்த இலக்கியப் படைப்பை உரை நடையிலாயினும் செய்யுளிலாயினும் செய்வராயின், ஒவ்வோராண்டும் அத்தகைய படைப்புகளில் சிறந்த படைப்புக்கு உலகத் திருக்குறள் பரிசு வழங்கப்பட வேண்டும். இதனை 'குறள்பரிசு' எனச் சுருக்கமாகவும் குறிப்பிடலாம். ஒவ்வோராண்டும் நடைபெறும் உலகத் தமிழ் மாநாட்டின் போதாவது, தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்படின் அதன் வாயிலாகவா

பண்டைத் தமிழ் நாட்டின் வடஎல்லே வேங்கடமன்று; இமயம்.

-க.ப. அறவாணன் க.மு.

சிந்து வெளிக்கரையில் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு திராவிடர் வாழ்ந்திருந்தனர்; அவர் திராவிட மொழி பேசினர். அரும் பெரும் நாகரிகம் ஒன்றைச் சிந்து ஆற்றங்கரை ஓரத்தில் அமைத்தனர். கி.மு 1500-இல் நடு ஆசியாவிலிருந்து ஆரியர் படைஎடுத்தனர். ஆரியர்க்கும் சிந்துவெளித் திராவிடர்க்கும் பெரும் போர்கள் நடந்தன. திராவிடர்தம கோட்டைகள் இந்திரனுல் தகர்க்கப்பட்டன. அதனுல் இந்திரன் புரந்தரன் (கோட்டைகளைத் தகர்ப்பவன்) என்று பெயரெய்தினுன். நாக வழிபட்டினராகிய திராவிடரை இந்திரன் வென்ருன். திராவிடர் பலர் இறந்தனர். சில குடியினர் தென்புலம் பெயர்ந்தனர். மற்றும் சில குடியினர் ஆரியர் தம் தலைமையை ஏற்றுக் கொண்டு அடங்கினர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வது ஓரிலக்கம் அல்லது ஈரிலக்கம் மதிப்புள்ள இப்பரிசு வழங்கப்பட வேண்டும். திருக்குறளைத் தேசிய நூலாக ஏற்குமாறு நடுவணரசை வற்புறுத்த வேண்டும்.

9) கடல் கடந்த நாடுகளில் மிகச்சிறு பான்மையராக வாழுந்தமிழர் தமிழ் கற்க வாய்ப்பின்றி அல்லற் படுகின்றனர். அத்தகையோர்க்குத் தமிழ்ப்பாட நூல்களையும் தமிழாசிரியர்களையும் அனுப்பி உதவுதல் வேண்டும்.

10) மேனுட்டு மொழிகளிலுள்ள புத்தம்புதிய அறிவுத்துறை நூல்களையும் சமக்கிருதத்திலுள்ள வானியல் ,கணிதவியல், மருத்துவம், ஏரணம், மெய்ப்பொருளியல் தொடர்பான நூல்களையும் தமிழில் மொழிபெயர்ப்பதற்கான விரிவான திட்டத்தோடு கூடிய தனித்துறைகள் பல்கலைக் கழகங்களின் வாயிலாக நிறுவப்படவேண்டும் இதற்கு மாநில மொழிகளை வளப்படுத்துவதற்கான நடுவணரசு கல்வித்துறையினரின் நல்கையும் (grant) பல்கலைக்கழக நல்கைக் குழுவின் (U.G.C.) பொருளுதவியும் கிடைக்க ஆவன செய்தல் வேண்டும். தமிழைப் பாடவாயிலாகக் கொண்டு பட்டம் பெறும். மாணவர்கட்கு அரசுப்பணியில் முன்னுரிமை தரவேண்டும்.

வடஇந்தியாவில் திராவிடர் இருந்தமைக்கான சான்று சிந்துவெளி தவிர வேறு இல்லையா என்று வினவுவர். ஆப்கானித்தான் ஈரான், பலூசித்தான், ஆகிய நாடுகளில் இன்றும் பேசப் பெறும் பிராகுயி என்ற மொழி திராவிடமொழி என்றறியப்பட்டிருக்கிறது. அண்மையில் நேப்பாளத்தில் ஒரு சில குடிமக்கள் பேசும்மொழி திராவிடமே என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. சமக்கிருதத்திலும், இந்தியிலும், வங்காளியிலும் திராவிட மொழிக் கூறுகள் படிந்துள்ளன என்ற செய்தி மொழியியல் அறிஞர்களால எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

மேலே கண்ட மொழியியல் சான்று மட்டுமன்றி, இன்ன பிற மாந்த இயல் சான்றுகளும் இப்போது கிடைத்து வருகின்றன.

1. வரலாற்றுத் தந்தை என்று கருதப்பெறும் கிரேக்க அறிஞன் எரோடேட்டசே தென்னிந்தியா பற்றி, முதன்முதல் செலவுக் குறிப்பு எழுதியவர். கி.மு. 5 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த இவர், சிந்துவெளியில் கறுப்பு நிறமும் சுருட்டைமுடியும் உடைய திராவிடரைக் கண்டதாகக் குறிப்பு எழுதியுள்ளார். சிந்துவெளியில் இப்போது வெள்ளை இனத்தைச் சார்ந்த ஆரியர் வாழ்கின்றனர். முன்பு திராவிடர் அக் கரைகளில் வாழ்ந்தனர் என்பதை எரோடேட்டசின் குறிப்பு எடுத்துக் காட்டுகின்றது.

2. இன்றுள்ள இந்திய மாநிலங்களுள் பெரிய மாநிலமாக விளங்கும் உத்திரப் பிரதேசத்தில் அரசமுத்திரை இரட்டை மீன்களும் வில்லும் உடையதாக இருப்பது சிந்திக்கத்தக்கது. வில் தமிழ் மூவேந்தர்களுள் ஒருவராகிய சேரர் தம் குடி இலச்சினை; கொடி இலச்சினை; மீன் பாண்டிய மன்னர்தம் குடி இலச்சினை; கொடி இலச்சினைச் சான்றுகள் அற்றைத் தமிழ் மன்னர்தம் எச்சங்கள். (பார்க்க: கொடுமுடி. சண்முகன் கட்டுரை-கொங்கு-திங்களிதழ் 1976)

3. இன்று வடபுலத்தில் வாழும் கறுப்பு நிறமக்கள் அனைவரும் முன்னைத் திராவிட மக்களின் எஞ்சிய பகுதியினர் என்று கருதுதல் வேண்டும. நாகாலாந்தில் வாழும் நாகர் திராவிடர்க் குரிய உடல் தோற்றத்தை உடையோர் கறுப்பு நிறமக்களாகிய நாகர் பாம்பு வழிபாட்டினர். 'நாக' என்றசொல்லே திராவிடச் சொல்லாகும். ஆரிய மொழிச் சொல் 'சர்ப்ப' என்பதாகும். சமக்கிருதம் உள்ளிட்ட இந்தோ ஈரோப்பிய குடும்ப மொழிகளுள் 'சர்ப்ப' என்ற சொல்லே வழங்கு

கிறது. இலத்தீனில் 'தவழு' என்ற பொருளடிப்படையில் 'சர்ப்ப என்ற சொல் பாம்பைக் குறிக்கிறது. கிரேக்கத்தில் 'கெர்ப்ப' என்ற சொல்லும் ஃபிரஞ்சில் 'சர்ப்பான்' என்ற சொல்லும் ஆங்கிலத்தில் 'சர்ப்பென்ட்' என்ற சொல்லும் வழங்குகின்றன. மிகு குளிர் நாடாகிய ஐரோப்பாவில், வெப்பநாடுகளில் மட்டுமே வாழும் நாகப்பாம்பு இல்லை என்பதும் கருததக்கது. பொருளில்லா இடத்தில் பெயரேது? எனவே நாகப்பாம்பைக் குறிக்கும் 'நாக' என்றசொல் திராவிடச் சொல் என்பதும் தெளிவாகின்றன. திராவிடராகிய நாகர் வடபுலம் வந்த ஆரியரை எதிர்த்தனர்; ஆனால் தோற்றனர். இச் செய்தியை இருக்கு வேதம் குறிப்பாக உணர்த்துகின்றது. 'அகி' என்ற நாக வடிவில் இருந்த விருத்திராசுரனை இந்திரன் கொன்றான். இருக்கு வேதத்தில் வரும் மேற்கண்ட இந்திரப்போற்றி ஆரியர், நாகரை வென்ற செய்தியை மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. கேரள மன்னராகிய சேரர் நாகர் மரபினரே. சேரமண்டலம் என்பதன் ஒரு பொருள் நாக மண்டலம் என்பதாகும். சேரன் இலச்சினையான வில் பாம்பை நினைவு படுத்துவதாகும். சிவபெருமான் 'வாசுகி' என்ற பாம்பை வில்லாக வளைத்தான் என்ற கதை இங்கே இணைத்து நினைக்கத்தக்கது. திராவிடமா நிலங்களில் கேரள மாநிலமே நாகவழிபாட்டில் முதன்மையாக நிற்கிறது. நாயர் என்றசொல்லே நாகர் என்ற சொல்லின் திரிபாகும். தலைமுடியை முடிச்சிட்டு முன்தலை அமைத்துக் கொள்ளும் நாயர் உருவம் நாகப்பாம்பின் படத்தை நினைவு படுத்துவதாகும். பாம்புகள் நிரம்ப உடைய காண்டவ வனத்தை ஆரிய அர்ச்சுனன் எரித்ததாகக் குறிக்கப் படும் மாபாரத நிகழ்ச்சி திராவிட நாகரை ஒழிக்க ஆரிய அரசு எடுத்துக் கொண்ட முயற்சியைக் குறிப்பதாகும். கேரளத்தில் மன்னார்சாலா' என்ற ஊரில் சில குடியினர் இன்றும் வாழ்கின்றனர். அவர்தம் வீட்டுத் தோட்டங்களில் 'சர்ப்பக் காவுகள்' உள்ளன. அம்மக்கள் தம்மை நாககுலத்தினர் என்றும் அருச்சுனன் தம் பண்டை இருப்பிடமாகிய காண்டவ வனத்தை எரித்தமையால் தம் முன்னோர் இங்கே வந்தனர் என்றும் கூறிக் கொள்கின்றனர். (Anthropology in India P. 196) எனவே சேரர் நாகர் எனபதும், நாகர் சேரர் என்பதும் நாகர்-திராவிடர் என்பதும் அறியத் தக்கன. நாகவழிபாடு திராவிடர்க் குரிய வடபுலத்தில் ஆங்காங்கே பரவி இருப்பதும், அதன் பெயராலேயே ஓர் இனம் இருப்பதும் பண்டைத் திராவிடர்தம் பண்பாட்டு எச்சங்களைக் காட்டுகின்றன.

4. கிள்ளி, கிள்ளிவளவன் என்ற பெயர்கள் சோழர்க்கே உரிய பெயர்களாம். பீகார் மாநிலத்தில் 'அசூர்' என்ற பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அசுரர் என்ற சொல்லின் தேய்ந்த வடிவம் அசூர் என்பதாகும். 'அசூர்' 'அசுரர்' என்பவற்றின் பொருள் வலிமைவாய்ந்தோர் என்பதாகும். ஆரியர்தம் வேதங்களில் தம்மை எதிர்த்த மக்களை 'அசுரர்' என்று குறிப்பிடுவர். திராவிடர் உடன் வாழ்ந்த முண்டா பழங்குடி மக்களுள் ஒரு பிரிவினரே அசூர் இனத்தாராயினர். இப்பழங்குடி மக்கள் சிந்துவெளியிலிருந்து பீகாருக்குக் குடியேறியோர் என்று கருதப் பெறுகின்றனர். இவர்தம் குமுக அமைப்பினைக் 'கிள்ளி' என்று குறிப்பிடுகின்றனர். இவர்தம் குமுகத்தில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஐம்பெருங்குழு இன்றும் இருந்து வருகின்றது. ஏனைய மக்களைப்போல் வெளுத்த நிறத்தினராய் இல்லாமல் திராவிட இனத்தினரைப் போலக் கரிய இனத்தினராய் இவர்கள் உள்ளனர். இவர்கள் வாழுமிடம் சோடா நாகபுரியாகும். சோடா என்பது சோழா என்பதின் ஆரிய வடிவமாகும். 'ழகரம்' டகரமாகத் திரிதல் இருமொழி இயல்பு. அசூர் பழங்குடிப் பெண்கள், தமிழச்சியரைப் போல, இடுப்பில் சேலையணிந்து அச் சேலையையே மார்காப்பாக அணிந்து கொள்கின்றனர். ஆக கிள்ளி என்றபெயர் இவர்தம் கறுப்பு நிறத் தோற்றம், ஐம்பெருங்குழு என்பதன் அமைப்பு சிந்துவெளித் தொடர்பு, முண்டா மொழிப் பேச்சு, ஆரியரை எதிர்த்த 'வேதகால அசுரரின் தொடர்பு சோடா என்ற நிலப் பெயர் ஆகியன வடபுலத்தில் தமிழ்ச்சோழர் பண்டைய வாழ்வை நினைவுறுத்துகின்றன.

இமயமலையில் பல கணவாய்கள் உள்ளன. அவற்றுள் ஒரு கணவாயின் பெயர் 'சோடா' என்று வழங்குகிறது, இது 'சோழா' என்பதின் திரிபு ஆகும்.

5. திராவிட மொழிகளைப் பேசும் சில பழங்குடி மக்கள் இந்தியாவின் நடுப்பாகத்தில் வாழ்கின்றனர். இவர்கள் பேசும் மொழிகள் நடுத்திராவிட மொழிகள் என்று அழைக்கப்படும். ஒரிசா மாநிலத்தில் மார்சி குண்டு என்ற ஆற்றுக்கு வடமேற்கே 'போண்டோ' என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். வடபுலத்தில் வாழும் பழங்குடி மக்களுள் இம்மக்கள் மிக்க வலிமை வாய்ந்தோர் என்று மாந்த இயல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இம்மக்கள், பனைமரத்திற்கு மிகுந்த

முதன்மை அளிக்கின்றனர். இவர் தம் நிறம் தோற்றம் ஆகியன திரா விடரை நினைவு படுத்துவன. குறிப்பாகத் தமிழ்நாட்டுப் பாண்டியர் தம்மை மறவர் என்று அழைத்துக் கொள்வதும், பாண்டிய நாட்டு மறக்குல மக்கள், பாண்டியர் என்ற பெயரைப் பட்டப்பெயராக வைத்துக் கொண்டிருப்பதும் ஒருசார் பழங்குடி மக்கள் தம்மை 'போண்டோ' என்று அழைத்துக் கொள்வதும், முரட்டுத் தன்மை உடையராய் இருப்பதும் இணைத்து நினைக்கத்தக்கன. அன்றியும் தமிழ் நாட்டில் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் பாண்டிய நாட்டு (மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம்) பகுதிகளிலேயே பனைமரங்கள் மிகுதியாக இருக்கின்றன. இங்கே வாழும் மக்கள் தம் வாழ்வு பனைமரத்தைச் சார்ந்து அமைந்திருக்கிறது. இதனைப் போலவே போண்டா பழங்குடி மக்கள் பனைமரத்தோடு ஒன்றிய வாழ்க்கை உடையராய் வாழ்ந்து வருகின்றனர். எனவே போண்டோ பழங்குடி மக்கள் பண்டைய பாண்டிய இனத்தின் எச்சமோ என்று கருதவேண்டியுள்ளது.

இதுவரை கூறிய செய்திகள், வடபுலத்தில் திராவிடர் உரிமை மாந்தராய் வாழ்ந்த செய்தியை மொழியியல் சான்றுகள் மட்டுமின்றி மாந்த இயல் சான்றுகளும் வற்புறுத்துகின்றன என்பதையும் தமிழரசர் இமய எல்லையை வடஎல்லையாகக் கருதினதாகவும் இமயத்தில் வில், புலி, கயல் சின்னங்களைப் பொறித்ததாகவும் கொடிகளைப் பறக்கவிட்டதாகவும் பண்டைய தமிழ் இலக்கியத்துள் இடம் பெற்றுள்ள செய்திகள் பொய்யானவை அல்ல என்பதையும் காட்டுகின்றன. ●

"தமிழ்ச்சிட்டு"

சென்னை-5.

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	4-00	9-00	9-00
தனியிதழ் ,,	0-35	0-75	0-75

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

தமிழகம் தன்னுரிமை பெறுமுன் தமிழீழம் தன்னுரிமை பெறும்!

(தமிழீழத் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் நடத்திய நேருரை

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தம் இலங்கைச் செலவின் பொழுது தமிழீழத் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன், 22.5.78 அன்று ஒரு நேருரை (பேட்டி) நிகழ்த்தினார்கள். அவர்கள் இருவரும் பரிமாறிக் கொண்ட கருத்துகளை அப்படியே இங்குத் தருகிறோம். தமிழன்பர்கள் அங்குள்ள நிலைகளையும், நடைபெறும்

போராட்ட முறைகளையும் அதன் நோக்கங்களையும் நன்கு விளங்கிக் கொள்ள இந் நேருரை பயன்படும் என்று கருதுகிறோம். இந் நேருரையின் பொழுது தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தம் விடையில் பயன்படுத்திய பிறமொழிச் சொற்கள் மட்டும் (அவர்கள் இசைவுடன்) தமிழ்த்தனிச் சொற்களாக மாற்றப்பட்டுள்ளன. அவை தவிர அவரின் கருத்துகள் முழுவதும் எவ்வகை மாற்றமுமின்றி அப்படியே தரப்பெற்றுள்ளன. அத்துடன் அவர்கள் பயன்படுத்திய சொற்களும் ஆங்காங்கே பிறைக்கோடுகளுக்குள் தரப்பெற்றுள்ளன.)

ஆசிரியர் அவர்கள்: எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில் உங்களிடத்தில், தென்மொழிச் சார்பாகச் சில விளக்கங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன். எனவே நீங்கள் அறிந்தவரை விடைகள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

(1) இலங்கையில் இப்பொழுது ஈழத் தமிழர்களின் நிலை எப்படி இருக்கின்றது?

திரு. அமிர்தலிங்கம் அவர்கள்: இலங்கையில் அடிமை இனமாக இருக்கின்ற ஈழத்தமிழர்கள் வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் மிகவும் தாக்குதலுற்ற (பாதிக்கப்பட்ட) மக்களாக இருக்கின்றனர். அரசியலில் அடிமைத்தனம் ஏற்பட்ட பின்பு அவர்களுடைய பொரு

வியலடிப்படை, அவர்களுடைய கல்வி, அவர்களுடைய கலை என்னும் அவர்களுடைய வாழ்வின் ஒவ்வொரு துறையும தாக்குதலுற்றுள்ளது. இன்று, இறுதியாக அவர்கள் உயிர்வாழ்வதற்கே உரிமையற்ற ஓர் இனமாக, செல்லும் இடத்தில் எல்லாம் தாக்கப்படக்கூடிய மக்களாக, தம்மைத்தாமே பாதுகாத்துக் கொள்ளும் உரிமைகூட அற்ற ஓர் இனமாக ஆக்கப்பட்டுள்ளனர்.

(2) ஆசிரியர்: இப்பொழுது 'தமிழ் ஈழ விடுதலை இயக்கப்புலிகள்' என்று ஓர் இயக்கம் இருப்பதாக அரசு அறிவித்துள்ளதே, அது பற்றி எதிர்க் கட்சித்தலைவர் என்ற வகையில் உங்கள் கருத்து என்ன?

அமிர்: விடுதலை இயக்கப் புலிகள் என்று ஓர் இயக்கம் இருக்கிறதோ, இல்லையோ, எங்களுக்கு அதுபற்றி ஏதுவும் தெரியாது. ஆனால், விடுதலை ஆர்வம் கொண்ட இளைஞர்கள் தமிழ் ஈழத்தில் நிறைய இருக்கின்றார்கள். அவர்கள், தங்களை ஒப்படைத்து (அர்ப்பணித்து)க் கொண்டு இன விடுதலைக்காக உழைக்க ஆயத்தமாக இருக்கின்றார்கள் என்பதை மாத்திரம் நான் திட்டவட்டமாகக் கூறுவேன்.

(3) ஆசிரியர்: அப்படியானால், இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகின்ற முயற்சிகள் இந்தவகையில் அஃதாவது, நேரடியாகவோ, மறைமுகமாகவோ தமிழ் ஈழத்தைப் பெற்றுத் தரும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

அமிர்: உறுதியாக (நிச்சயமாக) நாம் தமிழீழத்தைப் பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இப்பொழுது நாம் செய்து கொண்டு வருகின்ற முயற்சிகள் அதற்குப் போதுமானவையா என்பது பற்றி நான் கூறமுடியாது. எங்களுடைய தமிழீழக் கோரிக்கை, 76-ஆம் ஆண்டு நாம் எடுத்த தீர்மானம், 77-ஆம ஆண்டு நடத்திய பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத் தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு நாம் இப்பொழுது பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

(4) ஆசிரியர்: அஃது என்ன தீர்மானம்?

அமிர்: அதற்கு முன்பு 76-ஆம் ஆண்டு மே-இல் தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு வட்டுக்கோட்டையில் நடைபெற்ற பொழுதுதான் தமிழர் கூட்டணியாகவிருந்த இயக்கத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றியமைத்து, எங்கள் குறிக்கோளை—"முழு(பூரண) இறைமையுள்ள தமிழ் ஈழத்தை" நிறுவுவதென்று நாம் தீர்மானித்தோம். அதற்கு முன்பு சிலர் அப்படித் தனிநாடாக அமைய வேண்டுமென்று கூறிக்கொண்டு

இருந்த போதிலும் பெரும்பாலான தமிழ் மக்களோ, தமிழ்மக்களுடைய இயக்கங்களோ அந்தக் கொள்கையைக் கொண்டிருக்க வில்லை.

,76 மே-14-இல் நடைபெற்ற எங்கள் முதலாவது மாநாட்டிலே நாங்கள் எடுத்த முடிவுதான் தமிழ் ஈழம் என்ற தனி நாட்டை இலங்கையில் நாம் அமைக்க வேண்டும் என்பது. அதற்கு நாம் மக்களின் ஒப்புதலை (அங்கீகாரத்தை)ப் பெறுவதற்குத்தான், 77 ஆடி மாதத்தில் நடைபெற்ற தேர்தலை நாம ஒரு கருவியாகப் பயன்படுத்தினோம் மக்களைத் தமிழீழ நோக்க (இலட்சிய)த்திற்காக ஒப்புதல் (வாக்கு) அளிக்கும்படி கேட்டோம். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழீழத்தின் நிலப்பரப்பில உள்ள 19 தமிழ்த் தொகுதிகளுள் 18 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றோம். ஒரே ஒரு தொகுதியில் மாத்திரம் இன்றைய ஆளுங்கட்சி 500 பெரும்பான்மை ஒப்போலை (வாககு) களால் வெற்றி பெற்றது. இந்த 18 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றதில் இருந்து தமிழ் ஈழமக்கள் மிகப் பெரும்பாலோர் தனித் தமிழ் ஈழம் அடைவதை- ஒரு தன்னுரிமை (சுதந்திர)த் தமிழ் ஈழம் அடைவதை-விருபபியிருக்கின்றார்கள் என்பது தீர்மானமாகிவிட்டது. அந்த அடிப்படையில்தான் பாராளுமன்றம் கூட்டப்பட்டவுடன் முதலாவது கூட்டத்திலேயே நான் ஒரு தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வர இருந்தேன். அந்தத் தீர்மானம் முன்மொழிய இருந்த அன்றே இலங்கையில் ஓர் இனக்கலவரம் வெடித்தது. தமிழ்மக்கள் எல்லா இடங்களிலும் தாக்கப்பட்டும், நூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டும், ஆயிரக்கணக்கான மக்கள் படுகாயமடைந்தும் பலகோடி பெறுமதியான, ஏறத்தாழ எனது மதிப்பீட்டின்படி நூறுகோடி உருபாவுக்கு மேலாகத் தமிழ் மக்களின் சொத்துகள் சூறையாடப்பட்டும், தீக்கிரையாக்கப்பட்டும் அழிக்கப் பட்டன. எங்கள் பெண்கள் பலர் கற்பழிக்கப்பட்டனர். இந்த வகையான தாக்கம் தமிழ்ஈழத் தீர்மானத்தை நாங்கள் பாராளுமன்றத்தில் ஒப்புவித்த (சமர்ப்பித்த) அன்றே ஏற்பட்டது. ஆனால் அது அந்தத் தீர்மானத்தினால் ஏற்பட்ட தாக்கமன்று. முன்கூட்டியே திட்டமிட்டுத் தமிழ் இனத்தைப் படுகொலை செய்யும் திட்டமென இது எனக்குத் தோன்றுகிறது. அந்தக் கலவரத்தின் பின்பு தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் சிங்களப்பகுதிகளில் இருந்து ஏதிலி (அகதி) களாகத் தமிழ் ஈழத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு வாழ்வு கொடுக்கும் வேலைகள் இன்னும் நிறைவெய்தவில்லை. அவர்களுக்குத் தமிழ் ஈழத்தில் நிலங்களைக் கொடுத்து வீடுகளை அமைத்து அவர்

களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை வாழ வைப்பதில் பல்வேறு இயக்கங்கள் ஈடுபட்டு வருகின்றன. அதே நோக்கில் சென்ற இனக்கலவரத்திலே தமிழ் ஈழத்தில் வாழ்ந்த தமிழர்களும் தாக்கப்பட்டனர். அரசின் காவல் படையினரால் தாக்கப் பட்டனர். அவர்களினால் ஏவிவிடப்பட்ட அண்மையில் தமிழ் ஈழத்தில் வந்து குடியேறிய சிங்களவர்களாலும் அவர்கள் தாக்கப்பட்டனர்.

இத் தாக்குதல்களிலிருந்து நாங்கள் கற்றுக்கொண்ட ஒரு பாடம் என்னவென்றால், எங்களுடைய மண்ணில் எங்கள் மக்களைப் பாது காப்பதற்கு நம் வழிவகைகளை உடனடியாகத் தேட வேண்டும். இத் தாக்குதல்களின் காரணியமாக எங்கள் இளைஞர்களில் ஒரு பகுதியினர் மிகத்தீவிரமாக இயங்க முற்பட்டதில் வியப்பு (ஆச்சரியம்) இல்லை. தன்மானமுள்ள எந்த இனத்திலுமுள்ள இளைஞர்களும் இந்த வகை யான தீவிரமான செயலில் இறங்குவது இயற்கையானதெனவே நான் கருதுகின்றேன்.

(5) ஆசிரியர்: *இப்பொழுது கேட்கப் போகிற கேள்வி உங்களுக் குக் கொஞ்சம் புதுமையாகவும், அதேபொழுதில் வியப்பாகவும் கூட இருக்கலாம்.*

ஒரு காலத்திலே தமிழகத்தில் தமிழ் நாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்று அங்கு இருந்த தலைவர்கள் சிலர் முற்பட்டார்கள். அதை ஓர் இயக்கமாகவும் நடத்தினார்கள். பிறகு நாளாக நாளாக அரசி யலிலே அவர்கள் பங்கு கொண்ட அந்த அடிப்படையில் அவர்கள் அந்தக் கொள்கையையே கைவிடவேண்டியதாக இருந்தது. அது போல ஒரு காலத்தில் நீங்களும் உங்கள் கோரிக்கையிலிருந்து சிறிது தளர்ந்து, தமிழ்ஈழம் கிடைக்காமற்போனாலும், தமிழ் மக்களுக்கு ஏதா வது ஒரு சமநிலை வாய்ப்புக் கொடுத்தால் போதும் என்கின்ற ஒரு கொள்கைக்கு நீங்கள் இறங்கிவிட மாட்டீர்கள் என்பதற்கு ஏதாவது உறுதியான நம்பிக்கை உங்களிடம் இருக்கிறதா?

அமிர்: இந்தியாவில் இருக்கிற நிலைமை வேறு. இலங்கையில் இருக் கின்ற நிலைமை வேறு. இந்தியாவில் தமிழ் நாட்டுமக்கள் இங்கு நாம் அடைகின்ற சிறுமையை அங்கு அடையவில்லை. தமிழ்நாட்டிலாவது அவர்கள் தன்மானத்துடன் ஓர் அளவிலாவது வாழக் கூடியவர் களாக இருக்கின்றார்கள். இங்கு எமக்கென்று ஒரு நாடில்லை. எமது நிலமென்று கூறுகின்ற நிலப்பரப்பிலேயே திட்டமிட்டுச் சிங்கள வல்லாளுமை (ஆக்கிரமிப்பு) - சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. ஆட்சியாளர்களின் நெருக்கடிகளே, ஆளும் இனத

தினுடைய முறைகேடு (அக்கிரமங்) களே எங்களை இந்தத் தமிழ்ஈழ நோக்க (இலட்சிய) த்திலிருந்து போகவிடாது தடுத்து நிற்கின்றது என்பது எனது உறுதியான நம்பிக்கை. ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் நாம் தமிழ் ஈழத்தைத்தவிர வேறுபாதை இல்லை என்ற முடிவுக்கே தள்ளப்பட்டிருக்கிறோமே தவிர அதை நாங்கள் மீள ஆய்வு செய்வதற்கு எந்த வகையான இடமும் இல்லை.

(6) ஆசிரியர்; *மகிழ்ச்சி. இப்பொழுது உள்ள முயற்சிகள் தமிழ் ஈழத்தைப் பெற்றுத்தரும் என்று நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?*

அமிர்: இப்பொழுது இருக்கும் முயற்சிகள் போதுமானவையல்ல. ஆனால் நாங்கள் தொடர்ந்து எடுக்கத்திட்டமிட்டிருக்கும் முயற்சிகள் உறுதியாகத் தமிழ்ஈழத்தைப் பெற்றுத்தரும் என்று நான் நம்புகிறேன்.

(7) ஆசிரியர்: *தமிழ் ஈழம் கிடைப்பதற்கு வன்முறை அல்லது காந்தீயமுறை இந்த இரண்டு முறையில் எந்த முறையை நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று விரும்புகின்றீர்கள்?*

அமிர்: இன்று தமிழர் இந் நாட்டில் இருக்கும் நிலையில் நாங்கள் காந்தீய வழியில்தான் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வழியில்தான் எம் முயற்சிகளை மேற்கொள்ள எண்ணியிருக்கின்றோம். நாட்டில் சூழ்நிலை மாற்றம், அனைத்துலக (சர்வதேச)ச் சூழ்நிலையில் இருக்கும் மாற்றம் ஒருவேளை வேறு வழிகளுக்கு இயக்கத்தைத் தள்ளலாம். ஆனால் இன்று இருக்கும் நிலையில் நாங்கள் மென்முறையில் (சாத்வீகம்) காந்தீய வழியில்தான் செல்லத்திட்டமிட்டுச் செயற்படுகின்றோம்.

(8) ஆசிரியர்: *அதாவது அரத்தம் சிந்தித்தான் ஒரு நாடு விடுதலை பெறமுடியும் என்ற ஒரு நிலை உலகவரலாற்றில் இருக்கின்றது. அப்படி இருக்கும் பொழுதும் நீங்கள் காந்தீய வழியிலே அந்த விடுதலையைப் பெற்றுவிட முடியும் என்று நினைப்பது காந்தி பிறந்த நாட்டிலேயே நடைபெறாத அந்நிலை உங்கள் நாட்டில் நடத்தமுடியும் என்று எப்படி நீங்கள் நினைக்கின்றீர்கள். இந்தியா தன்னுரிமை பெறுவதற்குக் காந்தீய முறைமட்டும் பயன் தரவில்லை. அங்கு இருக்கின்ற மக்கள் கிளர்ந்தெழுந்து போராடி அரத்தம் சிந்திய பின்னர்தான் விடுதலையைப் பெறமுடிந்தது. அப்படி இருக்கும் பொழுது இங்குமட்டும் அந்தமுறை உண்மையாகவே பயன்பெறும் என்று நீங்கள் நம்புவது, இதை ஒரு கற்பனையான கொள்கையாகவே செய்துவிட முடியாதா?*

அமிர்: இலங்கை ஒரு துளி அரத்தமும் சிந்தாது தன்னுரிமை (சுதந்திரம்) பெற்ற நாடு, இந்தியத் தன்னுரிமை (சுதந்திர)ப் போரி

னுடைய ஒரு விளைவாக, துணை இலங்கையில் உரிமை (சுதந்திரம்) கிடைத்தது. மலேசியாவிலிருந்து சிங்கப்பூர், பேச்சு முறை மூலமே உரிமையை (சுதந்திரத்தை)ப் பெற்றது. உலகில் அரத்தம் சிந்தாமலே உரிமை (சுதந்திரம்) பெற்ற நாடுகள் பல உண்டு. அண்மையில் பிரித்தானிய மூற்றதிகார (ஏகாதிபத்திய) த்தில் அடங்கியிருந்த எத்தனையோ சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் எவ்வகைப்போராட்டமும் இல்லாமல் படிப்படியாகத் தன்னுரிமை (சுதந்திரம்) பெற்று வருகின்றன. ஆனால் இலங்கையில் இன்று இருக்கின்ற சூழ்நிலையில் அரத்தம் சிந்தாமல் உரிமையை (சுதந்திரத்தை)ப் பெறுவோம் என்று நினைக்கவில்லை. தன்னுரிமையை (சுதந்திரத்தை)ப் பற்றிப் பேசிய உடனேயே நாங்கள் அரத்தம் சிந்தும்படி செய்யப் பட்டோம். அரத்தம் சிந்திக் கொண்டுதான் இருக்கின்றோம். எம் மக்கள் அரத்தம் சிந்தாமல் உரிமையை (சுதந்திரத்தை)ப் பெறுவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் எங்களுடைய அரத்தத்தைத்தான் சிந்துகின்றோம். மற்றவர்களுடைய அரத்தத்தைச் சிந்தச்செய்ய வில்லை, என்பதைத் தவிர வேறு எதையும் நான் கூறவில்லை.

(9) ஆசிரியர்: சரி! மகிழ்ச்சி; அடுத்து, தந்தை செல்வாவின் காலத்துக்குள் தமிழ் ஈழம் கிடைக்கும் என்று ஒருவகையாக நம்பியிருந்தோம், ஆனால் கிடைக்கவில்லை, இனி உங்கள் காலத்திற்குள்ளாவது தமிழ் ஈழத்தைக் காணுகின்ற வாய்ப்பைப் பெறுவோமா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

அமிர்: தந்தை செல்வாவே கூறினார் தம்முடைய காலத்தில் தமிழ் ஈழம் கிடைக்காவிட்டாலும் என்னுடைய காலத்தில் தமிழ்ஈழம் கிடைக்கும் என்று. நானும் நம்புகிறேன். எங்களுடைய காலத்தில் உறுதியாகத் (நிச்சயம) தமிழ்ஈழம் காண்போம் என்று.

(10) ஆசிரியர்: மிக்க மகிழ்ச்சி; உங்கள் குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்பதில்-நானும் ஒரு விடுதலைப் போராட்ட உணர்வுடையவன் என்ற வகையில்-உங்கள் குறிக்கோள் வெல்ல வேண்டுமென்று-நான் மனமார வாழ்த்துகின்றேன்.

தமிழ் ஈழம் கிடைக்கச் செய்யும் போராட்டத்தில், தமிழகத் தலைவர்கள் அல்லது தமிழகமக்கள் உங்களுக்குத் துணைவருவார்கள் நம்புகிறீர்களா. அவ்வாறு கொள்ளும் நம்பிக்கைக்கு அடிப்படையான காரணம் என்ன?

அமிர்: இன்று தமிழகம் இருக்கும் நிலையில் யாரும் எமக்குத் துணை வருவார்கள் என்று நம்பிக்கை எமக்கில்லை. அவர்கள் அனைத்திந்திய

அரசின் வல்லாட்சிக் (ஆதிக்கத்திற்)உட்பட்டுத் தமக்குள்ளேயே ஒற்றுமை அற்ற ஓர் இனமாக, பதவிப் போட்டிகள் மலிந்த ஒரு நாடாக இன்றைக்கு உள்ள தமிழ்நாட்டில் உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் எமக்கு உதவிக்கு வருவார்கள் என்று நாம் நம்பவில்லை. ஆனால் இங்கே நாம் ஒரு போராட்டத்தை நடத்தி நாம் துன்புறுத்தப் படுகின்ற அந்நேரத்தில் உறுதியாக (நிச்சயமாக)த் தமிழகத்தில் பொதுமக்கள் இரக்க (அனுதாப)த்துடன் பொங்கி எழுகின்ற ஒரு நிலை வரும் என்று நான் நம்புகிறேன். அந்த எழுச்சி அனைத்திந்திய அரசையும் எங்களுடைய கோரிக்கையில் எமக்கு எதிராக(பாதகமாக)வாவது செயற்படாது தடுத்து நிறுத்தும் என்பது எமது நம்பிக்கை. இதற்கு மேலாக எதையும் அவர்கள் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கவில்லை

(11) ஆசிரியர்: ஆகவே, நீங்கள் உங்களுடைய செயல்களிலே, கொள்கையிலேயே அதைக் கொண்டு செலுத்துகின்ற முறைகளிலே மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றீர்கள் என்று நம்புகிறேன். சரி, தமிழீழம் பெற்றபின் உங்கள் ஆட்சி சிங்கள அரசுடன் எவ்வாறு அமைய வேண்டுமென்று விரும்புகின்றீர்கள்?

அமிர்: எங்களுடைய ஆட்சி சிங்கள அரசுடன் நட்புறவுடன் இயங்க வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம். ஏனென்றால், எமக்குப் பொதுவான பல பொருளியல் (பொருளாதார) நிலைச் சிக்கல் (பிரச்சனை)கள் உண்டு. இன்றைக்கு வங்காள தேசத்திற்கும் இந்தியாவிற்கும் கங்கை நீரைப் பங்கிடுவதால் உள்ள சிக்கலைப் (பிரச்சனையைப்) போன்ற பல சிக்கல் (பிரச்சனை)கள் இந்தத் தமிழீழத்துக்கும் சிங்கள நாட்டிற்கும் இடையில் உண்டு. ஆனபடியால் நட்புறவாக வாழவே நாம் விரும்புகின்றோம். அந்த நட்புறவு தமிழீழம் அமைத்த பின்பும் ஏற்படும் என்பதை நாம் நம்புகிறோம்.

(12) ஆசிரியர்: சரி, நீங்கள் விரும்பும் தமிழீழம் இப்போது குடியரசுத் தலைவர் சே. ஆர். செயவத்தனாவிடம் இருந்தே கிடைக்கும் அல்லது அவர் காலத்திலேயே பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

அமிர்: இப்போது இருக்கின்ற குடியரசுத்தலைவர் எமக்குத் தமிழீழம் தருவார் என்று நான் நம்பவில்லை. அவர் தமிழ்மொழிக்குச் சில உரிமைகளையும் மேலும் சில அதிகாரங்களையும் மிகக் குறைவாகப் பரவலாக்குகின்ற சில திட்டங்களையும் தந்து, தமிழ்மக்களை நிறைவு

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம்.)

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்கி, ஆத்மசோதி, குமுதம், திருவள்ளுவர், ஆனந்தன், வீரகேசரி, கதிரொளி, தமிழோசை, குரல்மலர்; தர்மசக்கரம், கலைமகள், சமுகத் தொண்டன் போன்ற ஏடுகளும், சென்னை வானொலியும் ஏற்றுச் செய்திகளைப் பரப்பின. தமிழ் மறைக் கழகத்தின் தொடர்ந்த முயற்சியைப் பாராட்டி நாவலர். பர். சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி. சி, கணபதி, தவத்திரு. குன்றக்குடி அடிகளார், இரா.பி. சேது, ம.பொ.சி. இலெ. கரு. இராமநாதன், பர்.மா. இராசமாணிக்கனுர், சித்தாந்த சிரோன்மணி. சி.எசு. கந்தசாமி, பாயோகி சுத்தானந்த பாரதியார், புலவரேறு அ. வரதநஞ்சையனுர், காஞ்சிபுரம் க. வச்சிரவேலு, இரா. தேசிகன், கோவை சி.எம். இராமச்சந்திரனுர், பர்.மு. வரதராசனுர், சுவாமி. சித்பவானந்தா, பொய்யாமொழிப் பூஞ்சோலை ஆசிரியர் அ. முத்துசாமி, புலவர் சி. இலக்குவனுர், பேரா. அ.ச. ஞானசம்பந்தனுர் சோம. இலெ, வேதாரணியம் சர்தார். அ, வேதரத்தினம், ம.பா. பெரியசாமித்தூரன், தென்காசி ஏ.எசு. சண்முகநயினுர். வ.சுப. மாணிக்கனுர். அறிஞர். பொ. திரிகூடசுந்தரனுர், கி.வ. சகந்நாதன், கலைவாணர் என்.எசு. கிருட்டிணன். டி.கே. சிதம்பரநாதனுர், கல்கி, இரா. கிருட்டிணமூர்த்தி, மலையா, க. இராமநாதன், சிங்கப்பூர் தமிழோசை ஆசிரியர் சொ. ஐயாத்துரை முதலிய அறிஞர்கள் கா.பொ. இரத்தினம் அவர்களுக்கு மடல்கள் எழுதி அவரை ஊக்குவித்தனர்.

இவர் வேண்டுகோளுக்கு இசைந்து, இலங்கையிலுள்ள யாழ்ப்பாணம், கொழும்பு, கதிர்காமம், உனுப்பிட்டி, காலி, கண்டி, கல்முனை, ஏருவூர், ஆண்டிமடு, நல்லூர், அச்சுவேலி, பண்ணுகம். குப்பிழான், இணுவில், கரணவாய், திருநெல்வேலி (யாழ்ப்பாணம்), கரம்பன், எருக்கலம்பிட்டி, தையிட்டி, சங்கானை, பரந்தன், மாதகல், பலாலி, ஏழாலை, சரசாலை, சரவணை, வேலணை, நயினுதீவு, ஊரதீவு, மண்டைதீவு, திருகோணமலை, முந்தல், உடப்பு, தம்புலுவில், அளவெட்டி, மறவன்புலோ, களிபுரம், மகாவத்தை, ஏழாலை, அனுராதபுரம், நீர்வேலி, கோயிலடி, புலோலி, புங்குடுதீவு, கொடிகாமம், பாலைக்குளி, ஓமந்தை ஆகிய ஊர்களிலும், இந்தியாவிலுள்ள மயிலாப்பூர், தியாகராயநகர், தென்காசி, புதுச்சேரி, புதுக்கோட்டை, சென்னை, குன்னூர், தேவகோட்டை, மதுரை, சேலம், மாம்பலம். குண்டக்கல், சித்தூர், வேலூர், திருவல்லிக்கேணி, காரைக்குடி, மேலைச்சிவபுரி, உடுமலைப்பேட்டை, இராயவரம், சின்னசேலம், கோயம்புத்தூர், திருவையாறு, கல்கத்தா, பங்களூர், பம்பாய் முதலிய ஊர்களிலும், பர்மா, மலாயாவிலுள்ள கோலாலம்பூர், சிறம்பான், சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்காவிலுள்ள, சோகன்சுபேக், டர்பன், டிரான்சுவால் ஆகிய இடங்களிலும் உள்ள தமிழ் மன்றங்கள், கழகங்கள், சங்கங்கள், கல்வி நிலையங்கள், முதலியன திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடியனவாகத் தெரிவித்தன.

தமிழ்மறைக் கழகத்தின் திருக்குறள் முதல் மாநாடு, 1953-ஆம் ஆண்டு, மே மாதம் 28,29,30-ஆம் பக்கல்களில், இலங்கைத் திருகோணமலையில் உள்ள இந்துக்கல்லூரியில் நடந்தது. அம் மாநாட்டை பர்.வ. பொன்னையா. க.இ; இலக். அறி. அவர்கள் தொடக்கி வைத்தார்கள், பண்டிதர். கா.பொ. இரத்தினம். அவர்களும், வழக்கறிஞர் பொன். இரகுபதி, க.இ; என்.ஆர். இராசவரோதயம்.(பாராளுமன்ற உறுப்பினர்), கே. சிவபாலன்.க.இ ஆகிய நால்வரும் தலைமை தாங்கினார்கள். தமிழகத்திலிருந்து தமிழரசுக் கழகத்தலைவர், ம.பொ.சி; பேரா. அ,ச. ஞானசம்பந்தம், சோம. இலெ, சுவாமி சச்சிதானந்த ஒகி முதலிய பதினைந்து அறிஞர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினர். இப்பொழுது நடைபெறுவது போலவே திருக்குறட் சுவடி ஊர்வலமும், இசைவிருந்து, நாடக அரங்கு நிகழ்ச்சிகளும் அம் மாநாட்டில் நடந்தன. அதனைத் தொடர்ந்து பதினேழு மாநாடுகளைப் பண்டிதர் அவர்கள் ஆங்காங்குப் பலவூர்களிலும் நடத்தித் திருக்குறள் பெருமைகளை நாடறியச் செய்து வருகிறார். அவ்வகையில் அவர் சிறிதும் சலிப்போ, சோர்வோ கொண்டதாகத் தெரியவில்லை. நாளடைவில் தம் அரும் பெருந்தொண்டைப் பிறர் எவரும் எவ்வகையிலும் பாராட்டாத நிலையிலும், தம் ஊக்கம் குறைவுபடாமல் இன்றும், அறுபத்து நான்கு ஆண்டு அகவையிலும் மிகமிக ஈடுபாடாகவும் எழுச்சியாகவும் இத் திருக்குறள் தொண்டைத் தாமே முன்னின்று செய்து வருவதுடன், நூற்றுக் கணக்கான இளைஞர்களையும், தமிழறிஞர்களையும், தமிழன்பர்களையும், ஆயிரக்கணக்கான மாணவர்களையும் அதில் மகிழ்ச்சியுடன் ஈடுபடும்படி செய்தும் செய்வித்தும் வருவது உண்மையிலேயே நன்றியுடன் போற்றிப் பாராட்டத்தக்கதாகும்.

செந்தமிழ்க் கலைமணி, முதலிய சிறப்புப் பட்டங்களையும், வித்துவான், பண்டிதர், இலண்டன் பி.ஏ. ஆனர்சு, அண்ணுமலை, சென்னைப் பல்கலைக் கழக பி.ஓ.எல் எம்.ஏ. ஆகிய கல்விப் பட்டங்களையும் இலங்கை தமிழாராய்ச்சித் தலைமை, கொழும்பு அரச கரும மொழித் திணைக்களத் தலைமைத் தகுதிகளையும் பாராளுமன்ற உறுப்பாண்மைப் பொதுப் பணி நிலையையும் பெற்றிருந்தும், ஒருசிறிதும் ஆரவாரமின்றியும், செருக்கின்றியும் ஒரு நாளில் பெரும் பகுதியையும் பொதுத் தொண்டுக்கே இலக்காக்கிக் கொண்ட பேரறிஞர் கா.பொ. இரத்தினம் அவர்களின் அருந்தமிழ்த் தொண்டும், திருக்குறள் தொண்டும், அரசியல் தொண்டும், பெரிதும் பாராட்டி மகிழத் தக்கதுடன், பின்பற்றவும் தக்கச்சிறப்பு சான்றனவாகும். எளிமையான வெள்ளையுடையுடனும், மலர்ந்த முகத்துடனும், இனிமையும் அன்பும் கலந்தொழுகும் நல்லுரைகளுடனும், தளராத ஊக்கமும், தவிராத கடமையுணர்வும், கலங்காத நெஞ்சமும், எதற்கும் எவர்க்கும் அஞ்சாத பேராண்மையும்

பொதுவாழ்வில் மாசு மருவிலாத தூய்மையும், பண்பொழுக்கமும், விருந்தோம்பும் சிறந்த தமிழநாகரிகமும் பொருந்திவிளங்கும், பண்டிதர் அவர்களைப் போல், தங்கள் வாழ்க்கையைப் பொதுத் தொண்டுக்கே இலக்கணமாகவும் இலக்கியமாகவும் செய்து கொண்டவர்களைக் காண்பது இக்காலத்தில் மிகமிக அருமையும், இயலாமையும் ஆகும்! இவை வெறும் அன்புணர்வால் எழுதப் பெறும் வரிகள் இல்லை; நடுநிலை உணர்வாலும், உண்மை அறிவாலும், நன்றி நிறைந்த நெஞ்சாலும் எழுதப் பெறும் மெய்க் கூற்றுகளாகும்.

4. அழைப்பு ஏற்பும் புறப்பாட்டு முயற்சியும்!

இத்தகைய பெருமை மிகு ஒருவரை நான் தென்மொழியின் வாயிலாக உணர்ந்திருந்தேனே தவிர நேரில் அறிந்திராமல் இருந்தது எனக்கொரு குறையாகவே இருந்தது. மேலும், தொடக்கத்தில் அவர் கொண்டிருந்த தமிழ்த் தொண்டுடன், இக்கால் அரசியல் தொண்டையும் அவர் தம் முழுநேரத் தொண்டாகக் கொண்டு இயங்குவதால் முன்போல், அடிக்கடி தென்மொழி வாயிலாகவும் அவருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இயலாதவராக அவர் இருந்தார். எனவே, அவரிடமிருந்து, இவ்வாண்டு நடைபெறவிருந்த பதினெட்டாவது திருக்குறள் மாநாட்டிற்கு வந்த அழைப்பை, நேரம், காலம், இடம், விளையழுத்தம் எதையும் ஆராய்ந்து பாராமல் உடனே ஏற்றுக் கொண்டு கீழ்வருமாறு அவர்களுக்கொரு விடை மடல் விடுத்தேன்.

மேழம். 15.
சென்னை. 5.
(28.4.78.)

பேரன்புடையீர்,

வணக்கம். நலம். நலமே விளைக. நீண்ட இடைவெளிக்குப் பின் தங்கள் மடலைப் பெற்றதில் பெருமகிழ்ச்சி கொண்டேன். அதுவுமன்றித் தங்கள் தமிழ் மறைக் கழகத்தின் 18-ஆவது திருக்குறள் மாநாட்டில் மே திங்கள் 20,21,22-ஆம் நாள்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் என்னைக் கலந்து கொள்ள அழைக்கும் அன்பழைப்பையும் பெற்று மிகவும் மகிழ்ந்தேன். நன்றி. நெடுநாட்களாகவே, தமிழீழம் வந்து தங்களையும் நந் தமிழினத்திற்காகவும்; அதன் விடுதலைக்காகவும் உழைக்கும் ஈழத் தமிழினத் தலைவர்களையும் கண்டு பேசவும் பேரவாக் கொண்டிருந்தேன். தங்களின் அன்பழைப்பு அதற்கொரு துணையாக அமைவது நிறைவாக உள்ளது.

எனக்கு ஈழம் வரவும்; வேறு கிழக்காசிய நாடுகள் மேலை நாடுகள் செல்லவும் ஏற்கனவே எல்லைக்கடவு (PassPort) உண்டு. ஆனால் ஈழ நுழைவுச் சீட்டு (Visa தான் பெறவேண்டியிருக்கும். மேற்

கொண்டு நீங்கள் என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ, அதைத் தங்கு தடையின்றிச் செய்யலாம்.

நான் தமிழீழம் வருவது இதுவே முதல் முறையாகலின் முடிந்த அளவில் வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்தால் என் வரவு மிகவும் பயனுடையதாக விருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்று, அன்பர் திரு. கோவை மகேசன் அவர்களுக்கும் என் நெஞ்சு நிறைந்த அன்பையும் வாழ்த்துகளையும் தெரிவியுங்கள். பிற தங்கள் அன்பான விடைகண்டு.

அன்புநிறைந்த
பெருஞ்சித்திரன்

—இம் மடலுக்குப் பின் நுழைவிசைவு பெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பெற்றன. சென்னையிலுள்ள இலங்கை உயர் ஆணையர் அலுவலகத்தில், எனக்கு இசைவு தருதற்கு எல்லாவகையிலும் காலத்தாழ்த்தம் செய்யப் பட்டது. இருப்பினும், பண்டிதர் அவர்கள் இலங்கையிலுள்ள அதிகாரிகளிடம் செய்த பெரு முயற்சியால், திருச்சி வானூர்தி நிலயத்திலிருந்து நான் புறப்பட வேண்டிய 19.5.78 -ஆம் பக்கலுக்கு முன்னைய நாளில் எனக்கு இசைவு கொடுக்கப் பட்டது. அதன் பின் என் வரவு பற்றிப் பண்டிதர் அவர்களுக்கு ஒரு தொலைவரி கொடுத்து விட்டுத் திருச்சி புறப்பட்டுப் போய் அங்கிருந்து வானூர்தி வழியாக யாழ்ப்பாணம் போவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்து முடித்தேன்.

(தொடரும்)

பிழை திருத்தம்

சென்ற இதழில் எதிர்பாராத வகையில் பலவகையான அச்சுப் பிழைகள் நேர்ந்துள்ளன. பொறுப்பாசிரியர் தம் வெளியூர்ச் செலவாலும் அலுவலகப் பொறுப்பாளர் தம் கவனக் குறைவாலும் நேர்ந்த அப் பிழைகளுக்குப் பெரிதும் வருந்துகிறோம். ஓரிரு பிழைகள் பொருளே மாறும்படி நேர்ந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று, கீழ் வரும் திருத்தத்திற்குரியது.

பக்கம்: 26: இரண்டாம் பத்தியில். '**ஆரியரின் மனவளர்ச்சி தந்த பண்பாடு**' என்னும் தொடரைத் தொடர்ந்து '**தன்னல அளவில் நின்றது; தமிழரின் மனவளர்ச்சி தந்த பண்பாடு பொது நலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பொலிந்தது**' என்று திருத்திப் படித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—அமைச்சர்.

தமிழக அரசின் பார்வைக்கு:

கன்னட அகர முதலி!

கருநாடக அரசு ஏற்றுக் கொண்ட பெரும் பொறுப்பு!

(பாவாணர் தொகுக்கும் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி வெளியீட்டுப் பொறுப்பில், தமிழக அரசு ஏன் இன்னும் முழுக் கவனம் செலுத்தக் கூடாது? கன்னட அகர முதலி வெளியீட்டுக்கு ஒதுக்கப் பெற்ற தொகையைப் பார்க்க, தமிழ் அகர முதலிக்கு ஒதுக்கப் பெற்ற தொகை மிக மிகக் குறைவானது என்பதைத் தமிழக அரசு கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.)

கன்னட அகரமுதலியின் முன்னுரையில், அத் திட்டம் 1954-இல் தொடங்கப்பெற்றதென்று கூறப்பட்டுள்ளது. தொடக்கத்தில், ஓரிலக்கம் அரசு ஒதுக்கியது. அது போதாது என்றதும் மேலும் 15 இலக்கம் ஒதுக்கி 1966இல் அகரமுதலி பணி முடிவுற வேண்டும் என்றனர். 1966–இல் ஒரு மடலம் கூட வெளியிட இயலாத நிலையில் மேலும் 16 இலக்கம் (மொத்தம் 32 இலக்கம்) கன்னட அரசு ஒதுக்கியது. 1970-இல் முதன் மடலமும் அடுத்த இரு மடலங்கள் 1975 1976-இலும் வெளிவந்தன. அடுத்த இரு மடலங்கள் 1980–இல் வெளி வருமாம். துறையில் 18 பேர் பணியாற்றுகின்றனர். கன்னட இலக்கிய மன்றம் (கன்னட சாகித்திய பரிசத்து) இப்பணியை அரசின் உதவி பெற்று நடத்துகிறது.

மெய்ப்புத் திருத்தாளர் ஒவ்வொரு மெய்ப்பையும் இருபது முறை படித்துப் பார்த்து மெய்ப்புத் திருத்தினராம். 1954 முதல் 1964 வரை பத்தாண்டுக்காலம் சொற்றெகுப்பு அட்டைகளை மட்டும் எழுதி முடித்திருக்கிறார்கள். அகரமுதலி 10 000 படிகள் அச்சிடப்பட்டுள்ளன.

5 மடல அகரமுதலிகளின் மொத்த விலை உருபா 120. முதன் மூன்று மடலங்களை அனுப்பிவைக்கும் செலவோடு உருபா 180 முதலில் அனுப்ப வேண்டும். அடுத்த இருமடலங்களை வரவழைக்க மேலும் உருபா 40 கட்ட வேண்டி வரலாம்.

(செய்தி: பன்மொழிப்புலவர். இரா. மதிவாணன், க.மு.)

உலகத் தமிழ்க் கழக 4-ஆவது மாநாடு.

அண்மையில் 2-7-78 சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற உலகத் தமிழ்க் கழக 4-ஆவது மாநாட்டுச் செய்திகளும், தீர்மானங்களும் இடமின்மையால் இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் இடம் பெறும்.

மக்களவை

விளம்பரப் பலகைத் தமிழ்ப் படுத்தம் தமிழக அரசின் கட்டளை என்னாயிற்று?

ம: 223: மதிப்பிற்குரிய ஐயா, வணக்கம். தமிழ் நாட்டரசு புரட்சிப் பாவலர் பாரதிதாசனாருக்குச் சிறந்த முறையில் மாவட்டந் தோறும் விழாவெடுத்தது. அதற்கு முன்னர், கடைப் பெயர்ப் பலகைகளைத்தும் தமிழில் எழுதிவைக்க வேண்டும்என்ற ஓர் ஆணையையும் பிறப்பித்திருந்தது. தமிழ்ப் பெயர்கள் பலகையின் மேல், முதல் வரிசையில் பெரிதாக எழுதப்பட்டு, அதன் கீழ்ப் பிறமொழிப் பெயர்கள் எழுதப்பட வேண்டும் என்று அந்த ஆணை கூறியது.

இவையெல்லாம் தமிழுக்குச் செய்யப் பெறுந் தலைசிறந்த நற்பணிகள் என்று பெரிதும் மகிழ்ந்தேன். தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ் இல்லையே என்று தணிப்பரிய துன்புற்ற பாவேந்தரின் துன்பம் துடைக்கப் படும் என்றெண்ணினேன். தமிழ்த் தெருவில் இனியேனும் தமிழ் வாழும் என்று நம்பினேன். கடந்த சில மாதங்களாகப் பல ஊர்களுக்குச் சென்று வந்திருக்கின்றேன், ஆனால் எங்கும் தமிழ்ப் பெயர்ப் பலகைகளைக் காண முடியாது ஏமாறினேன். தமிழ்ச் சாலைகளில் எல்லாம் ஆங்கிலப் பெயர்ப் பலகைகளையே காண முடிந்தது. நான் சென்ற ஊர்களில்தான் இந்நிலை; ஆனால் தமிழ் நாட்டின் தலை நகரில் இப்படியிராது என்று நம்பினேன்.

அண்மையில் சென்னை வந்தேன். மிக ஆவலாய்ப் பெயர்ப் பலகைகளை யெல்லாம் உற்று உற்றுப் பார்த்தேன். தமிழ்ப் பெயர்ப் பலகைகளை எங்கும் காண முடியவில்லை. எல்லாம், 'கபே'வாகவும் 'டிரேடர்ஸ்' ஆகவும் 'ஹோட்டலாகவும்' 'பவன்' ஆகவும் 'ஸ்டோர்' ஆகவுந்தாம் காட்சி யளித்தன.

அரசு பிறப்பித்த ஆணை சிறிதும் செயல்படுத்தப் படாமை மிகவும் கவலையளிக்கத் தக்கது. 'தமிழ நிலத்தில் தமிழைப் பயன் படுத்து' என்று ஆணை போட வேண்டிருயிக்கிறது; அப்படிப் போட்டும் அது நிறைவேற்றப் படாமல் கிடக்கிறதென்றால், அது தமிழ் நாட்டரசுக்கே இழிவாகும்.

மிதிவண்டியில் விளக்கில்லாமல் இரவில் சென்றால் காவலர் பிடித்துக் குற்றம் சுமத்தி வழக்குப் போடுகிறார். தமிழில் பெயர்ப்

பலகை வைக்காத குற்றவாளிகளை யார் கண்காணிப்பது? நடவடிக்கை எடுப்பது?

தமிழுக்குத் தொண்டு செய்வதாகக் கூறும் த.நா. அரசு, தன் ஆணை நிறைவேற்றப் படாமலிருப்பதை உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

எல்லா வணிகர்களும் தூய தமிழில் அரசின் ஆணைப்படி பெயர்ப் பலகைகளை விரைந்தமைக்கத் தமிழ் நாட்டரசு தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அண்ணாசாலையில் அரசு அலுவலகங்களின் பெயர்ப் பலகைகள் கூட ஆங்கிலத்தில் காணப்படுகின்ற இழிநிலையை அகற்றவு முயல வேண்டும்.

அரசின் ஆணை உடனடியாகத் தமிழ் நாடு முழுவதும் நிறைவேற்றப் படும் நாளே பாவேந்தரின் துயரைக் களைந்து, அவருககு விழாவெடுக்கிற நன்னாளாகும்.

எபபணிக்கும் முதற்பணியாய்த் தமிழ்ப்பணி செய்ய வேண்டும்

—க. தமிழமல்லன், புதுச்சேரி.

ஆர்கலி' என்பது ஒரு கடலின் பெயரா?:

ம: **224**: அன்புள்ள ஐபா, வணக்கம். அண்மையில் நான் தங்களைச் சந்தித்தபோது "ஆர்கலி" என்ற சொல்லைப் பற்றி என் கருத்தைக் கூறினேன். அதைப் பற்றி உங்கள் சிநதனைக்காக மேலும் சில கூற விரும்புகின்றேன்.

"ஆர்கலி" என்பது குமரிமுனைக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள நீரிணை (சலசந்தியின்) பெயர் என்று கனகசபை (பிள்ளை) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள், (Tamils 1800 years ago). அவருக்கு அடிப்படை 'தாலமி' என்பவர் எழுதிய 'பெரிபுளுசு' என்ற பொத்தகம். அதில் இந்தக் கடல் 'Orgalic Gulf என்று குறிப்பிடப் படுகிறது. (Gulf of Orgali) எனவே இது தமிழர் அந்தக் கடலுக்கு இட்டபெயர் என்பதில் ஐபமில்லை.

இந்தக் கடலின் இக்காலப் பெயர் Gulf of Mannar. இந்தப் பெயர் தலைமன்னாரிலிருந்து வந்தது. இதை நோக்கும் போது கழகக் காலத்துக்குமுன் "ஆர்கலி" என்ற ஒரு நகரம் (கடல் கொண்ட கபாடபுரம் [அலைவாய்] போல்) "ஆரவாரிக்கின்ற" கடற்கரை ஓரத்தில் நின்று பின் கடல்கோளின் போது அழிந்து போயிருக்கலாம். அதன்

பெயரே இந்தக் கடலுக்குக் கொடுக்கப்பட்டிருக்கலாம் (ஒப்பு: குமரிமுனை) என்று எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சொல் கீழ்க் காணுமாறு பொருள் திரிபு பெற்றிருக்க வேண்டும்:—

1. முதல் நிலை

இலங்கைக்கும் குமரிமுனைக்கும் இடையிலுள்ள கடலின் பெயர். இந்தக் கடல் ஒரு நீரிணையான படியால் கடலாரவாரம் மிகுந்து இருப்பதில் வியப்பொன்று மில்லை. எனவே தமிழர், உரத்த ஆரவாரத்துக்கு உவமையாக இக்கடலை குறிப்பிட்டிருக்கக் கூடும்.

1. தாலமி—"Orgalic gulf" (Periplus)
2. மாணிக்கவாசகர்—"ஆர்கலிசூழ்தென் இலங்கை" (குயில்பத்து)
3. "ஆர்கலி எழிலி"—ஐங்குறுநூறு 428 ஆர்கலிக் கடலிலிருந்து கடல் நீரை முகந்து வரும் எழிலி.
4. ஆர்க்கலியினனே சோணாட்டு அண்ணல் —கபிலர் புறம் 337 பெயர் குறிக்கப்படாத இவன் சோழக் கப்பல் படைத் தலைவனுயிருந்திருக்க வேண்டும். அவனுடைய படை ஆர்கலிக் கடலில் நிறுத்திவைக்கப் பட்டிருந்திருக்க வேண்டும்.

2. இரண்டாவது நிலை

ஆர்கலி என்ற இடுகுறிப்பெயர் உவமையாகி பெயரெச்சமாகிறது: "ஆர்கலி கடல்போல் பரந்த, அல்லது ஆரவாரிக்கின்ற"

1. ஆர்கலியாணர்—"ஆர்கலிக் கடல்போல் பரந்த புதுவிளைச்சல் தரும் நிலப்பரப்பு" (புறம் 400)
2. ஆர்கலி நறவு:— "ஆர்கலி கடல்போல் மிகுந்த" அல்லது "ஆர்கலி கடலின் அலைபோல் வெண்மையான நறவு"(புறம் 91)

3. மூன்ருவது நிலை

ஆர்கலி என்ற இடுகுறிப் பெயர் எல்லாக் கடலையும் குறிக்கும் பொதுப் பெயராக்கி உவமையாகக் கையாளப்படுகிறது."

1. "ஆர்கலி வெற்பன்"—கடல்போல் ஆரவாரிக்கின்ற மலைநாட்டுத் தலைவன். (நற்: 104 குறுந் 257,353)
2. "ஆர்கலி விழவு"—கடல்போன்ற ஆரவாரத்தை யுடைய விழா (குறுந். 223)

3. ஆர்கலி ஏறு—கடல் போல் ஓசையிடுகிற இடி (குறுந்: 183)

4. நான்காவது நிலை

'கடல் போல்' என்ற உவமையும் கைவிடப்பட்டு "ஆரவாரிக்கின்ற" என்ற பொருளே எஞ்சி நிற்கின்றது:—

1. "ஆர்கலி உழவர்"—ஆரவாரிக்கின்ற உழவர் (குறுந்: 155)

2. "காரும் ஆர்கலி தலையின்று"—கார் காலத்து முதல் மழை ஆரவாரத்தோடு பெய்கின்றது (அகம்: 54)

இந்த நிலையினின்று வேர் கண்டுபிடிக்க முயலுவோர்—ஆர்கலி என்பது ஒரு கடலின் இடுகுறிப் பெயர் என்பதை மறந்து—அந்தச் சொல்லை ஆர் + கலி என்று பிரிப்பார்கள்:

ஆர் < ஆர்தல் = ஒலித்தல் (குறுந் 15,17,39)
கலி = முழக்கம் (குறுந்: 173,183, 223,318)

இவ்வாறு இரண்டு பகுதிகளுக்கும் ஒரே பொருளைக் கொடுத்து, ஒரு பொருள் தரும் இருசொற்றொடராக்கி "மிகமிக உரத்த ஒலி", "ஆரவாரம்" என்று பொருள் கொள்வார்கள். இதிலும் வியப்பொன்றுமில்லை.

எடுத்துக்காட்டு:
(உ.வெ.சா-குறுந் 186, "மிக்கமுழக்கம்" அவ்வை. சு. புறம் 337-"நிறைந்த ஆரவாரம்")

மேற் கூறியதை இவ்வாறு சுருக்கமாய் கூறலாம்:—

ஆர்கலி

இலங்கையை சூழ்ந்துள்ள கடலின் இடுகுறிப்பெயர்—பெயர்ச்சொல்

"ஆர்கலிக் கடலைப்போல் ஆரவாரிக்கின்ற"—உவமைப் பெயரெச்சம்.

"கடல்போல் ஆரவாரிக்கின்ற"—உவமைப் பெயரெச்சம்.

ஆரவாரிக்கின்ற-(பெயரெச்சம்)

இந்தச் சொல் விளக்கங்களில் குற்றமிருக்கலாம். பாவாணர் ஐயா அவர்கள் இந்தக் கூற்றை ஆராய்ந்த பின்னரே இதில் ஏதாவது உண்மை உண்டா என்று தெரிந்து கொள்ளலாம்.

—வி. அசரியா, க.மு. (ஆங்கில இலக்கியம்), வேலூர்-6.

ஈரோடு திருக்குறள் பேரவைச் சார்பாகப் பொறுப்பாசிரியர் அவர்களுக்களித்த

வரவேற்புப்பா.

(சென்ற 17.4.78 அன்று, ஈரோடு திருக்குறள் பேரவைச் சார்பாக நடந்த சிறப்புக் கூட்டத்தின் பொழுது, பொறுப்பாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை வரவேற்றுப் பாடிய வரவேற்புப் பா.)

விண்ணிலே மின்னிடும் கோடிமீன் சேரினும்
வெண்மதிக் கொப்ப தாமோ?
வீடுவாழ் பூனைகள் ஆயிரங் கூடினும்
வரிப்புலிக் கீட தாமோ?
எண்ணெய் விளக்குகள் எத்தனை எரியினும்
எழில்மின் விளக்க தாமோ?
ஏரிகள் எத்தனை எத்தனைச் சேரினும்
ஆர்கடல் நிகர்த்த வாமோ?
எண்ணிக்கை மிகுபல குன்றுகள் கூடினும்
இமயத்திற் கொப்ப தாமோ?
எத்தனை எத்தனைச் சிறுநரிகள் சேரினும்
எதிராமோ, வரிமா விற்கே?
மண்ணிலே வாழ்கிற மொழியெலாம் நமதரும்
மாத்தமிழ்க் கிணைய தாமோ?
வண்டமி ழாவிங்கு நிகருனக் காருண்டு?
வருகநீ! வருக!! நீயே.
(படித்தளிப்பவர்: தி-வளர்மதி 5-ஆம், வகுப்பு மாணவி)

முற்காலப் பிற்கால நமது காதை
வண்டமிழின் தனிப்பெருமை இனப்பெருமை
கற்பித்தே எங்களுக்கோ இனப்பற் றென்னும்
கனல்மூட்டி விட்டதொடு நும்மை நந்தம்
தற்காலக் காவலரில் சிறந்தோ ரென் று
சாற்றியெமக் காசையெழச் செய்தா ராசான்!
நற்காலம் பார்த்திருந்தோம் நீரும் வந்தீர்,
நாங்களுமைக் கண்டுகளி கொண்டோம்;
[கொண்டோம்!

தாய்வருகை தானறிந்து தாவிவரும் கன்றாய்
தனித்தமிழின் காவலரே! உமைக்காண இன்றே
பாய்ந்தோடி வந்தோமே! வந்தோமே!! வந்தோம்!!!
பார்த்துமனம் பூரித்தோம்! பூரித்தோம்!! எந்தாய்!!

பழந்தமிழனின் அடிச்சுவடுகள்

—தா. பாண்டியன், க.மு.,ச.இ.

[26-10-1970 அன்று, திருப்பூர், சிக்கண்ணா அரசுக்கலைக் கல்லூரியில் நிகழ்ந்த மாணவர் தமிழ் இலக்கிய மன்றத் தொடக்க விழாவில், சிறப்புரையாற்ற வருகைதந்த திரு. தா.பாண்டியன், க.மு.,ச.இ. அவர்களை வரவேற்றுக் கல்லூரி முதல்வர் பேரா. மு.க. தங்கவேலு, க.மு., இல.மு. அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமும், மன்றத்தைத் தொடக்கி வைத்துத் திரு. பாண்டியன் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கமுமே இவை. அக்கல்லூரியின் 1970-71 கல்வியாண்டின் ஆண்டுமலரிலிருந்து எடுத்துத் தரப்பெறுகின்றன. (பக்-109); இங்குள்ள தலைப்பு தென்மொழியால் கொடுக்கப்பட்டது.]

முதல்வரின் வரவேற்புரைச் சுருக்கம்:

நண்பர் பாண்டியன் அவர்களே! ஆசிரிய நண்பர்களே! மாணவக் குழந்தைகளே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

மாயும்வரை அழியாத மனப்படமும் எடுத்தோம்
வண்டமிழில் பாடியுமை வணங்குகிறோம் யாமே,
ஆய்தமிழப் பாவேறே! அன்பே நீர் வருக!
அடிமைநிலை தனைத்தகர்க்க முயல்வோரே வருக!
(படித்தளிப்பவர்: இரா-கற்பகம் 5-ஆம், வகுப்பு மாணவி)

கெஞ்சேன்! கெஞ்சேன்! பிறரை; அவர்தம்
கேடுதனக்கும் அஞ்சேன்!
துஞ்சேன்! துஞ்சேன்! மொழியை நாட்டை
ஆளாமல்நான் துஞ்சேன்!
எஞ்சார் எவரும் எந்தமிழ் மாந்தர்
தோள்கள் எழுந்தால்! அன்றே,
பஞ்சாய்ப் பறப்பார் என்றே முழங்கும்
பாவலர் ஏறே! வருக!

மொழியை இனத்தை நாட்டை உன்றன்
விழியாய் உடலாய் உயிராய்
வழியே படுவோய் அவைதம் வாழ்வை
உன்வாழ் வெனவே கருதி
அழியா திருக்கத் தொண்டே யாற்றும்
அப்பா! உன்னைக் கண்டோம்
கழிபே ருவகை கொண்டோம் எங்கள்
காவல! வருக! வருக!!

(படித்தளிப்பவர், இரா-திலகவதி 5-ஆம்,வகுப்பு மாணவி)

பாடல்களை இயற்றியவர்: பாவலர், கொ.செ. சின்னப்பா
கொம்மக் கோவில்-ஈரோடு)

இந்த இலக்கிய மன்றம் இவ்வாண்டிலிருந்துதான் புதிய முறையில் நம்மால் தோற்றுவிக்கப் படுவதாகும். சென்ற ஆண்டுவரை, கல்லூரித் தமிழ்ப்பேரவையே அனைத்துத் துறைகளிலும் இயங்கி வந்தது. ஆனால், இவ்வாண்டு, இலக்கியம் பயிலும் மாணவர்கள், தங்களுக்கென—தங்களது மிகு அறிவை வளர்த்துக் கொள்வதற்காக ஓர் அமைப்பு வேண்டுமெனக் கேட்டனர். அதன் விளைவே இம்மன்ற மாகும்.

தமிழ் என்பது, பாண்டியரால்தான் வளர்க்கத் தொடங்கப் பெற்றது. பாண்டியனால் தொடங்கி வைக்கப்பட்ட தமிழுக்கு வீழ்ச்சி இல்லை; எழுச்சியே உண்டு. அதன் ஏற்றமும் உயர்வும என்றும குறைவதில்லை. இன்றும், இத் தமிழ்மன்றம பாண்டியனாலேயே தொடங்கி வைக்கப் படுகிறது. எனவே, இத் தமிழுக்கு வீழ்ச்சியில்லை.

நண்பர் பாண்டியன் ஆற்றப்போகும் உரைக்குப் பாயிரமாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அஃதாவது, இலக்கியம் என்பது ஒரு நிழல். அதன் உண்மை உருவம் வாழ்க்கைதான். எனவே, வாழ்க்கையின் நிழலே இலக்கியம் என்பது.

இலக்கியம், வாழ்வின் நிறைகுறைகளை அப்படியே படம் பிடித்துக்காட்டுவதா? அல்லது, வாழ்வின் நிறைகளை மட்டுமே காட்டுவதா என்பதில் அறிவுலகத்தில் கருத்துவேறுபாடு உண்டு. இலக்கியம் என்பது, வாழ்க்கையில், மாந்தக் குமுகாயத்தில் காணப்படும் குறைபாடுகளை அகற்றிப் புதியதொரு குமுகாயத்தைப் படம் பிடித்துக் காட்டுவதெனில் அதுபொருந்தும்.

கிரேக்க அறிஞன் ஒருவன், வாழ்வின் நிழலின் நிழலின் நிழலைக் காட்டுவதே இலக்கியம் என்கிறான். (Literature is the shadow of the shadow of the shadow of the life) எனவே, இலக்கியம் என்பது குமுகாயத்தின் குறைபாடுகளைக் களைந்த நிழல்! வாழ்க்கையைச் சீரிய வழியில் இட்டுச் செல்கின்ற ஒரு வழிகாட்டியாகும்!

இன்று தொடங்கப் படுகின்ற இத்தமிழிலக்கிய மன்றத்தில், பாட்டரங்கங்கள், பட்டிமன்றங்கள், கருத்தரங்குகள் முதலியன பல நடைபெற இருக்கின்றன. இம்மன்றம் மேன்மேலும் சீரிய முறையில வளர்ந்தோங்குமாக எனக் கூறிக்கொண்டு, பாண்டியனைப் பேச அழைக்கின்றேன்.

திரு. தா. பாண்டியன் அவர்களின் உரைச்சுருக்கம்:

உங்களது முதல்வர் கூறியதுபோல், இலக்கிய மறுமலர்ச்சி பற்றிப் பேசுவதற்கு முன், இலக்கியம் என்றால் என்ன என்பதைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். இலக்கியம் என்பது வாழ்க்கையிலிருந்து மாறுபட்டதன்று; கற்பனையிலேயே வரையப் பட்டதுமன்று. வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்ற

ஒரு கண்ணாடியே இலக்கியமாகும். இந்த உண்மையை அறிந்து கொண்டுதான் நாம் இலக்கியத்தை அறியப் புக வேண்டும்.

அதற்கு முன், நான் சில செய்திகளைக் கூற விரும்புகிறேன். கொஞ்ச நாட்களுக்கு முன், சென்னை நகரில் முழுக்க முழுக்க நடிகர்களே இல்லாத ஒரு படம் திரையிடப்பட்டது. அதுவும் முழுக்க முழுக்கத் தமிழனைப் பற்றிய படம்; தமிழனின் வரலாற்றைப் பற்றிய படம். அந்தப் படத்தைப் பார்க்க, நாலுகோடித் தமிழர்களின் தலை நகரான சென்னை நகரிலிருந்து நாற்பத்தேழு பேர் மட்டுமே வந்திருந் தனர். இதைவிட வெட்கக்கேடான செய்தி வேறொன்றுமில்லை. ஆனால், அந்தப்படம் முடிந்து, அடுத்த காட்சி தொடங்கியதும் ஏராளமான கூட்டம். ஏனெனில், அந்த அடுத்த காட்சிக்கு உரியது, உடற்கவர்ச்சியைக் காட்டியே நடிகர்களும் நடிகைகளும் நடித்த ஒரு படம். இந்த இருபடங்களைக் காண வந்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டே தமிழனை எடைபோட்டு விடலாம்.

"ஒரு பிரெஞ்சு வேட்டைக்காரன் கம்போடியா நாட்டைக் காண வந்தான். அதன் தலைநகர "ஆங்கோர்" என்பது. ஆங்கோர் என்றால் "திருநகர்" என்று பொருள். இதனை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே கட்டியவர்கள் தமிழர்கள் என்றால் வியப்பாகத்தான் இருக்கிறது. நமக்கும் தமிழர்கள் என்ற முறையிலே கொஞ்சம் தலைக்கனம் ஏறத்தான் செய்கிறது.

அந்த வேட்டைக்காரனுக்கு, வேட்டைத் தொழிலோடு, தொல் பொருள் ஆராய்ச்சித் துறையிலும் சிறிது நாட்டம் அதிகம். எனவே, அவன் கம்போடிய நாட்டின் அடர்ந்த காடுகளில் வேட்டையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது, அங்கிருந்த ஓர் ஆலமரத்தின் விழுதில், கல்லாற் செதுக்கப்பட்ட மாந்த உருவச் சிலையின் தலையைக் கண்டான். அவன், அவ்வேரைக் கீறிப்பார்த்ததும், அது முழுச்சிலை என்பதையும், அதன் கீழ்ப்பாகம் முழுவதும் மண்ணுக்குள் இருக்கிற தென்பதையும் உணர்ந்தான். அவனுக்கு, அந்தப் பகுதியில் நகரமோ, ஏதேனும் வியத்தகு பொருளோ புதைந்திருக்க வேண்டும் என்ற ஐயம் உண்டாயிற்று. அஃது, இரண்டாவது உலகப்போர் தொடங்கிக் கொண்டிருந்த காலம். எனவே, அவன் அந்நாட்டு அரச னிடம், தொல்பொருள் ஆராய்ச்சியைத் தான் தொடங்கவுள்ளது பற்றி வேட்புச் செய்து, அரசின் ஒப்புதலையும் பெற்றுக் கொண்டான். அதன் பிறகு, உலகின் அனைத்து நாட்டுத் தலைவர்களுக்கும் மடல்கள் எழுதி, அப்பகுதியில் குண்டு வீச வேண்டாமெனக் கேட்டுக் கொண்டான். காந்தியடிகளும்கூட, இட்லருக்கு, அப்பகுதியில் குண்டு வீச வேண்டாமெனக்கோரி, மடல் ஒன்றெழுதினார். மாந்த உள்ளமே இல்லாத இட்லர் கூட அப்பகுதியில் குண்டு வீசப்போவ தில்லை என அறிவித்து மடல் அனுப்பியிருந்தான். அதன் பிறகு, அவ்வேட்டைக்காரன், அப்பகுதிக்கு வேலியமைத்துத் தன் வேலையைத் தொடங்கினான். அவன் வேலை முடிவடையும் பொழுது,

இரண்டாம் உலகப்போர் முடிந்து ஏழு ஆண்டுகள் முடிந்துவிட்டன. அப்பொழுது, அழகுமிக்க நகரமொன்றை மண்ணினுள்ளிருந்து எடுத்து உலகுக்குக் காட்டினான் அவன். இந்நகரின் பரப்பளவு, ஏறக்குறைய இலண்டனின் பரப்பளவிற்குச் சமம். இதைத்தான் அப்படியே படமாக்கியிருந்தான்.

இப்படத்தில், அங்குள்ள கோவிலின் சிலைகளை ஒவ்வொன்றாகக் காட்டிக்கொண்டு வருகிறான். தமிழகத்து நாகசுரக் கலைஞனின் நாகசுர இசைப்பைக் காட்டுகிறான். பின், அதை அப்படியே நிறுத்தி விட்டு, அங்குள்ள, நாகசுரம் இசைத்துக் கொண்டிருக்கும் சிலை ஒன்றையும் காட்டுகிறான். இவ்விரு தோற்றங்களிலும் எத்தகு மாறுபாடும் இல்லை.

பின், ஒரு தமிழ்ப்பெண் நாட்டியமாடுவதைக் காட்டுகிறான். திடீரென்று, அதை அப்படியே நிறுத்திவிட்டு, அங்குள்ள நாட்டியம் ஆடும் பெண்ணின் சிலை ஒன்றையும் காட்டுகிறான். இவ்விரு உருவங் களின் தோற்றத்திலும் எத்தகு மாறுபாடும் இல்லை. பிறகு, தமிழ் நாட்டுச் சிலம்ப விளையாட்டொன்றைக் காட்டுகிறான். அதையும் அப்படியே நிறுத்திவிட்டு, அங்குள்ள சிலம்பம் விளையாடும் சிலைகளை யும் காட்டுகிறான். இவற்றின் தோற்றத்திலும் எத்தகு மாறுபாடு மில்லை. இதுதான் அந்தத் திரைப்படம்.''

இந்நகரை உருவாக்கியவன் சேரனா, சோழனா, பாண்டியனா என்று நமக்குத் தெரியாது. ஆனால், இது தமிழர்களால் கட்டப்பட்டது என்றுமட்டும் துணிந்து கூறலாம். இப்படத்தை இவன் உருவாக்கி, ''ஒன்றிப்பு நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்திற்குக் (UNESCO) கொடுத்தானாம். அதை அவர்கள் 'இந்தத் தமிழர்கள் தங்களது மேன்மையை உணரட்டும்' என்பதற்காக நமக்குக் கொடுத் தார்கள். ஆனால், அதைப் பார்க்கத் தமிழர்களுக்கு விருப்பமில்லை.

ஒருமுறை, இலங்கைக்குத் தெற்கே, இந்துமாவாரியின் அடியிலிருந்து எண்ணெய் எடுக்க ஒரு மேலை நாட்டார் முயற்சி செய்தனர் அவர்களை யார் என்று நான் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் இந்து மாவாரியின் அடியில் ஆய்வு நடத்தியபொழுது, அங்கு ஒரு மிகப்பெரிய நகரையே கண்டார்கள். 'ஒன்றிப்பு நாடு களின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகமும் (Unesco), இந்திய அரசும் ஒத்துழைத்தால், அந்நகரை வெளிக்கொணருவதாகவும் அவர்கள் கூறினார்கள். அது, தமிழர்களின் கடல்கொண்ட நகரமே என்பதில் ஐயமில்லை. அப்படிக்கொணரும் பொழுது, அக்காலத் தமிழர்களின வேலைத்திறனையும், நாகரிக முதிர்ச்சியையும் நாம் காணலாம். ஆனால், அவர்களால் உண்டாக்கப்பட்ட இலக்கியக் கருவூலங்களை நாம் எப்படிக் காணமுடியும்? எண்ணில்லாத இலக்கியங்கள் இப்படி இயற்கையின் தாக்குதல்களால் அழிந்து விட்டன. இதுபோலவே, நம் தமிழர்களின் அறிவின்மையால், கறையானுக்கு இலக்கான கருத்துக் கருவூலங்களும் ஏராளமாகும்.

இப்பொழுது, தமிழனுக்குத் தானாக எதையும் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உணர்வேயில்லை. பிறர் ஒன்று கண்டுபிடித்தால் அதைப்பற்றி வம்பு பேசியே காலத்தை ஓட்டிவிடுகிறான்.

இன்று உலகின் ஒவ்வொரு நாடும் தத்தம் தாய்மொழியிலேயே கல்விகளைக் கற்று முன்னேறிக்கொண்டிருக்கின்றன ஆனால், தமிழர்களுக்கு மட்டும் தங்கள் தாய்மொழியில் அறிவை வளர்த்துக்கொள்ள நம்பிக்கையில்லை. தமிழைப் பயிற்றுமொழி ஆக்கினால், ஆசிரியர்கள் எதிர்க்கிறார்கள்; அல்லது மாணவர்கள் எதிர்க்கிறார்கள், அல்லது பெற்றோர்கள் எதிர்க்கிறார்கள். எப்படியோ தாய்மொழிக் கல்விக்குத் தமிழர்களிடம் எதிர்ப்பு இருந்து கொண்டே இருக்கிறது தமிழர்களுக்குத் தன்மானம் இல்லை; எதிலுமே தாழ்வு மனப்பான்மை. இதனால், எதையும் கண்டுபிடிக்க முடிவதில்லை; பிறர் சொன்னால்தான் தலையசைக்கிறார்கள்.

இன்று வழக்கு மன்றங்களில் தமிழ் இல்லை; ஆங்கிலத்தில்தான் வழக்குரை நடைபெறுகிறது. நமது முன்னேற்ற மின்மையையே இது காட்டுகிறது. தமிழில் வழக்கு மன்றம் நடத்துவதில் தமிழருக்கே நம்பிக்கையில்லை.

இந்த நிலைக்கெல்லாம் காரணம் என்னவென்றால், தமிழ் இலக்கியத்துறையில் போதிய வளர்ச்சியின்மையே. தமிழ் இலக்கியத் துறை போதிய வளர்ச்சி பெற்றிருந்தால், இதுபோல் அவர்கள் கூறுவதற்கான துணிவு வராது.

பழங்கால இலக்கியங்களை எடுத்துப்பார்த்தால், அவற்றை நேரடியாக நம்மால் புரிந்துகொள்ள முடிவதில்லை. வேறொருவரின் உதவி தேவையாகிறது. காரணம், அக்கால மொழிவளமும் மக்கள் மனவளமுமே யாகும். இப்பொழுது அவற்றை எடுத்துப் பார்க்கும் பொழுது, எத்தனை உயர்ந்த படைப்புக்கள் அவை என்பதை உணருகிறோம்.

திருவள்ளுவர் அக்காலத்திலேயே சுருங்கச் சொன்னார் என்றால், அதற்குக் காரணம், விரிவாகச் சொன்னால் இந்தத் தமிழர்கள் மனத்தில் நிறுத்திக்கொள்ள மாட்டார்கள் என்பதுதான். சிலர், திருவள்ளுவருக்கு முன் இத்தகைய நாகரிக-பண்பாட்டு முதிர்ச்சியே இல்லை என்று கூறுகிறார்கள். திருவள்ளுவர்தாம் இதன் புதிய தொடக்கம் என்றும் கூறுகிறார்கள். இது ஏற்கத்தக்கதாக இல்லை. திருவள்ளுவர் தமக்கு முன் வாழ்ந்த அறிஞர்களின் கருத்துகளைத் தமதாக்கிக் கொண்டார். தமக்கு முன்வாழ்ந்த-தம் காலத்தில் வாழ்ந்த பண்பாட்டின் தொகுப்பாகவே தமது நூலை இயற்றினார். அப்பண்பாட்டினைத் தம் இயல்புக்கேற்ப மொழிந்தார். பருத்திக்

கொட்டையைத் தின்கின்ற மாடு, திரும்பப் பருத்திக் கொட்டையையே நமக்குத் தருவதில்லை. அதனைப் பாலாக மாற்றித்தான் நமக்குத் தருகிறது. திருவள்ளுவரும் தமக்கு முற்பட்ட கருத்துகளைப் பருத்திக் கொட்டையாகத் தாரமல், பாலாக மாற்றி நமக்குத் தந்தார். ஏனெனில் திருவள்ளுவருக்குத் தெரியுப் பாலாகக் கொடுததாலொழிய இந்தத் தமிழர்கள் செரித்துக் கொள்ளமாட்டர்கள் என்பது.

பாத்துறையில் பாரதியும் பாரதிதாசனும் மிகவுயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டனர். அவர்தம் பாக்கள், மிக உயர்வான ஒப்பில்லாத படைப்புகளாகி விட்டன. ஆனால், தமிழ் உரைநடை வளர்ச்சியைப்பற்றி அப்படிக் கூறிவிட முடியாது. ஏனென்றால், அந்த இடத்தைப பிடிக்க இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியிருக்கிறது, அந்தத் துறையில் எழுத்தாளர்கள் இன்னும் நிறைந்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுப. புதிதாக உருவாகும் எழுத்தாளர்கள அத்துறையை மேலும் வளர்க்க வேண்டும்.

இன்று, இலக்கியம் படைப்பவன் பல புலனங்களை எண்ணிச் செயல்பட வேண்டியிருக்கிறது. அவனது படைப்பு உலக வாழ்வுக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அழியாத படைப்பாகப் படைக்க வேண்டுமானால், உலக இலக்கியங்களோடு போட்டியிடத்தக்க வகையிலே படைக்க வேண்டும். தானும் வாழ்ந்து, தன் இலக்கியமும் வாழும் வகையிலே எழுத்தாளன் தன் படைப்புகளைப் படைக்க வேண்டும். அவ்வாறெனில், தன் படைப்புகளை வாணிகத்திற்கும் கொண்டு வரவும் வேண்டும்.

இப்படி, அவன் பல செய்திகளை எண்ணிச் செயல் படவேண்டி இருக்கிறது. அப்பொழுதுதான் அவனும் வாழ முடியும்; அவன் இலக்கியமும் வாழ முடியும்.

("நன்றி"-சி.அ.க. கல்லூரி ஆண்டுமலர் மலர்-5(1970-71.)

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளான்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	12 உருபா	24 உருபா	24 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ்:	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணக் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் கேட்க!

(24-ஆம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் போரை ஒருவேளை வலுக்குறைத்து (பலவீனப்படுத்தி) விடுமோ என்று கூட நினைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் அவர் அளிக்க இருந்த உரிமைகளை நாம் கெடுத்தோம் என்று உலகின் முன்னிலையில் கூறப்படுவதற்கு நாம் இடம் அளிக்க விரும்பவில்லை. அதனால்தான் அவர் என்ன செய்கின்றார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என்று நாம் உலகத்துக்குக் கூறிக் கூறிக் கொண்டிருக்கின்றோம்.

(13) ஆசிரியர்: தமிழகத்தில் கலைஞர் கருணாநிதியின் அரசு மீண்டும் திருவப் பெறுமானால் அவர் அரசு உங்களுக்கு அல்லது உங்கள் விடுதலை இளைஞருக்கு ஏதாவது ஒருவகையில் உதவுவார்கள் என நீங்கள் நம்புகிறீர்களா?

அமிர்: இன்று இருக்கின்ற அதிகாரங்களுடன் கூடிய தமிழக அரசு எதுவும் எமக்கு நேரடியாக உதவக்கூடிய நிலையில் இல்லை. ஆனால் வேறு எந்த அரசையும் பார்க்கக் கலைஞர் கருணாநிதியுடைய தலைமையிலான தமிழக அரசு ஈழத் தமிழர்களுக்கு இன உணர்வுடன் கூடிய இரக்கத்தை (அனுதாபத்தை)யும், ஆதரவையும் கொடுத்துத் தங்களால் இயன்றளவு உதவி செய்யும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

(14) ஆசிரியர்: மகிழ்ச்சி, ஒருகால் நீங்கள் நினைக்கும்படி தமிழக அரசிடமிருந்தோ, இந்திய அரசிடமிருந்தோ உங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு ஏதாவது உதவி கிடைக்கவில்லையானால் நீங்கள், தனித்து நின்றே உங்கள் நிலைமைகளைச் சமாளிக்கக் கூடிய வல்லமை உங்களுக்கு அல்லது இளைஞர்களுக்கு இருப்பதாக நீங்கள் நினைக்கின்றீர்களா? அல்லது வேறு ஏதாவது வல்லரசுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை நீங்கள் மேற்கொண்டுள்ளீர்களா?

அமிர்: நாங்கள் உலக நாடுகள் பலவற்றினுடைய இரக்கத்தை (அனுதாபத்தை)ப் பெறுவதற்கு எண்ணியுள்ளோம். ஆனால் அந்த நாடுகளின் நேரடித் தலையீடு ஏற்படவேண்டிய நிலைமை உண்டாகுமா, இல்லையா என்பதை நான் இப்போது கூறமுடியாது. ஆனால் எந்த வகையிலாவது வங்காள தேசத்துக்கு விடுதலை இந்தியத் தலையீடு இன்றிக் கிடைத்து இருக்க முடியாது. அதே போலே தமிழீழத்தின் விடுதலைக்கு வேறு நாடுகளின் தலையீடு தேவை (அவசியம்)

என்ற கட்டம் ஏற்படுமானல் நாம் அந்த உதவியைப் பெறுவதற்குப் பின் நிற்கமாட்டோம் என்று மட்டும் கூற முடியும். அதற்குமேல் இப்பொழுது நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

(15) ஆசிரியர்: மிக்க மகிழ்ச்சி; இறுதியாகத் தென்மொழி வாயிலாகத் தமிழக மக்களுக்கு நீங்கள் தருகின்ற செய்தி என்ன?

அமிர்: தமிழகமக்கள் நாலுகோடிக்கு மேற்பட்டவர்களாக இருந்தாலும், அவர்கள் இன்று வடநாட்டு ஆட்சியில் தம் உரிமை (சுதந்திரம்) அற்ற ஒரு நாட்டில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆயினும் ஈழம்வாழ் தமிழ் மக்கள் தமது இரத்தபாசமுள்ள உடன்பிறந்தவர் (சகோதரர்)களாக அவர்களை என்றும் கருதி அவர்களுடைய வாழ்வும் தமது வாழ்வும் என்றும் பிணைக்கப்பட்டிருப்பதாகவே கருதிக் கொண்டிருக்கின்றார்கள். பண்டைய ஈழத்தின் வரலாற்றை (சரித்திரத்தை) எடுத்துப் பார்ப்போமாயிருந்தால், தமிழகத்தினுடைய வரலாற்றோடு ஈழத் தமிழ்மக்களுடைய வரலாறும் பின்னிப் பிணைந்திருப்பதை நான் காணுகின்றேன். ஆனல், தமிழகம் உரிமை (சுதந்திரம்) பெறுவதற்கு முன்பே தமிழீழம் விடுதலை பெறுமென்ற நம்பிக்கை எமக்கு உண்டு; அந்தத் தமிழீழத்தின் விடுதலையின் வாயிலாகத் தமிழகத்திற்கும் விடுதலை பிறக்க, வழி வகுக்கப் படுமென்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர்; சரி. மிக்க மகிழ்ச்சி. இந்த நேருரையை உங்களிடத்திலே நான் பெற்றதற்கு உங்களுக்கும், உங்களுடைய துணிந்த நெஞ்சிற்கும் உங்களைச் சார்ந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான விடுதலை உணர்வு கொண்ட இளைஞர்களுக்கும், தமிழீழ மக்களுக்கும், என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வணக்கம். 0

வயிர மூக்குத்தி

(நாடகச் செய்யுள்)

- *ஆசிரியர்: இறைக்குருவனார்.*
- *தென்மொழியில் தொடர்ந்து வெளிவந்து நேயர்களைக் கவர்ந்தது.*
- *மொழி நூல் மூதறிஞர் பாவாணர் அவர்களின் அணிந்துரை கொண்டது.*
- *வரலாறு தழுவிய பாவியல் நாடகம்.*

விலை: உருபா 2-00. கிடைக்குமிடம்

ஆசிரியர், இறையகம், 2, மேற்கு அரசர் தெரு சென்னை-6000 16.	தென்மொழி புத்தக விற்பனை நிலையம் 51, அருணசல (ஆசாரி)த் தெரு, சென்னை-600005.

செய்திகள்

1. தமிழ்க்குமரன் - இந்திராகுமாரி - வாழ்க!

கடந்த விடை 26 (9.6.78 வெள்ளி காலை 9 மணியளவில், நெடுநாளையத் தென்மொழியன்பர் சி. தமிழ்க்குமரன் (குமாரசாமி) அவர்களுக்கும், செல்வி. பா. இந்திரா குமாரிக்கும், புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் பாவலரேறு. பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. திருவாளர்கள்; இராமச்சந்திரதுரை. வி எசு. மணியம், அ. பெரியண்ணன், இயலரசன், இளந்திரையன், அழகப்பன், புலவர். ச. இராமசாமி, அ. இராசகோபாலன், த. நல்லதம்பி, பக்கிரி மசுத்தான், பா. செழியன் சிங்கமுத்து ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரையாற்றினார்கள். சிறந்த பகலுணவிற்குப் பின் நிகழ்ச்சி இனிதே முடிவுற்றது. மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

2. ப. அதிவீரன் - பெ. வேதநாயகி - வாழ்க!

மதுரை மாவட்டம், சுண்ணாம்பூரில், கடந்த விடை 26 (9.6.78) அன்று, தென்மொழி ப. முருகவேள் அவர்களின் தம்பி, ப. அதிவீரன் அவர்களுக்கும் செல்வி. பெ. வேதநாயகிக்கும் திருமணம் இனிதே நடைபெற்றது. 10.6.78 அன்று ஒடைப்பட்டியில் மணமக்கள் வரவேற்பு நடந்தது. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவ்வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மணமக்கள் சார்பில் தென்மொழி வளர்ச்சிக்கு உரு 5, நன்கொடை தரப்பெற்றது. மணமக்களைத் தென்மொழி நீடுழி வாழ மனமார வாழ்த்துகிறது.

3) ப. இளங்கோவன் - இராணி - வாழ்க!

கடந்த 11.6.78-இல், மதுரை புதுக்கல்லூரி விடுதியில் (New College House Assembly Hall) நீண்ட நாளையத் தென்மொழியன்பர் பொறியாளர் திரு. ப. இளங்கோவனுக்கும், செல்வி இராணிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர். திரு. கே. கந்தசாமி, க. இ; ச.இ, அவர்கள் முன்னிலையிலும் திருமணம் இனிதே நடந்தேறியது. உயர்திருவாளர்கள். கந்தசாமி (ச.ம.உ) அ.மா. பரமசிவம். க.இ. (சட்ட மன்ற உறுப்பினர்.) இ. செல்வராசு, (துணை இயக்குநர், சிற்றூர் வளர்ச்சித் துறை) ஒய்.வி. நரசிம்மன் (மேற்பார்வைப் பொறியாளர்), புலவர் மணி, இளங்குமரன், ச. பரங்குன்றம். க, இ., பேரா. ப. இராமன், க.மு., ஏ.சி. சுப்புராமன் (முன்னாள் மதுரை நகராட்சித் தலைவர்) புலவர் சு. சின்னன் ஆகியோர் மணமக்களை நல்லுரையாற்றி வாழ்த்தினர். இனிய பகல் விருந்துக்குப் பின் மணவிழா நிகழ்ச்சி, இனிதே முடிவுற்றது.

மணமக்கள் இனிதே வாழத் தென்மொழி பல்லாற்றானும் வாழ்த்துகிறது.

4. ச. இலக்கிய அசோகன் - கு கலைவாணி-வாழ்க!

கடந்த 17 6.78 காலை 6 மணியளவில், திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) திரு. கொளஞ்சியப்பர் கோவில் திருமண மண்டபத்தில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் செல்வன். ச. இலக்கிய அசோகன் க.இ. செல்வி. கு. கலைவாணி ஆகியோரின் திருமண விழா சிறப்புற நடந்தேறியது. மணமக்களை வாழ்த்தி ஆசிரியர் த. சின்னத்தம்பி, கோ. சிவகுருநாதன், முதலியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

5. கரு. நடவரசன்-வீரம்மாள் வாழ்க!

சென்ற 18.6.78 காலை 8.30 மணியளவில், நெய்வேலி உலகத் தமிழ்க் கழக உறுப்பினரும் தென்மொழியன்பருமாகிய செல்வன கரு. நடவரசன் அவர்களுக்கும் செல்வி, வீரம்மாள் அவர்களுக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில இனிதே திருமணம் நடைபெற்றது. திருவாளர்கள் பி.கா. பண்டரிநாதன், சண்முகவேலு, இரா. கனகசபாபதி, வி. செயராமன், புலவர். இரா. அருட்குவை ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். இனிய விருந்திற்குப் பின் நிகழ்ச்சி சிறப்புற நிறைவுற்றது. மணமக்கள் இனிதே வாழத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

6. பாவேந்தர் பாரதிதாசனார் பைந்தமிழ்ப் பெருவிழா, புதுவை!

கடந்த இரட்டை 4. (18.6,78) ஞாயிறு மாலை 7 மணியளவில், முத்தரையர் பாளையம், புலவர் சீனிவாசன் அவர்களின் அரசம்மாள் அறைவை நிலையத்தில், பாவேந்தர் பாரதிதாசனார் பைந்தமிழ்ப் பெருவிழா இனிது நடைபெற்றது. உயர்திருவாளர் ஆ. இராமசாமி தலைமை தாங்கினார். திரு. கோ. தாமரைக்கோ வரவேற்புச் சிறப்புரையாற்றினார். உயர்திருவாளர்கள், தென்மொழித் திருமாறன், செல்வநாயகம், வீ. வீரராகு, முத்துக்கண்ணு, திருக்குறன் பெருமாள், தென்மொழி. ப. அடியார்க்கருளி ஆகியோர் கருத்துரைக்குப் பின் பாவலரேறு. பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரையாற்றினார். இரவு தென்மொழி கோ. தாமரைக்கோ அவர்கள் இல்லத்தில் மிகச் சிறந்த விருந்தொன்று நடைபெற்றது. திருவாட்டி தாமரைப் பெருஞ்சித்திரனார் பாவலரேறு பெருஞ்சித்திரனார், நெய்வேலி திரு. அறவாழி, திருக்குறள் பெருமாள் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். அன்பர் திரு. தாமரைக்கோ. அவர்களின் விருந்தோம்பலைப் பாராட்டியுரைத்த ஆசிரியரவர்கள், இதுபோல் பெருவிருந்து செய்வதால் ஏற்படும் செலவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. பாகூர் மறைமலையடிகள் மன்றச் சார்பாக உரு. 10/- தென்மொழிக்கு அன்பளிப்பாகத் தரப்பெற்றது.

ஆசிரியவுரையில் சில திருத்தங்கள்:

(பாவாணர் கட்டுரை அச்சேறியதன் பின் அவர் எழுதிவிடுத்த திருத்தம் இது. அன்பர்கள் அவரின் ஆசிரியவுரைக் கட்டுரையுடன் இதனையும் ஆங்காங்கே இணைத்துப் படித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—அமைச்சர்)

கட்டுரைத் தொடக்கத்தில்,

'சென்ற மேழ (சித்திரை) மாதச் 'செந்தமிழ்ச் செல்வி'யில் வெளிவந்த ஆசிரியவுரையைப் படித்துத் திடுக்கிட்டேன்' என்னும் வரியைச் சேர்த்துக் கொள்க.

2 ஆம் பக்கம் 5- ஆம் பத்திக்குப்பின் இதனைச் சேர்த்துக் கொள்க.

எத்துறையிலும் தகுதிபற்றிப் பதவி ஏற்பட வேண்டுமேயன்றி; பதவிபற்றித் தகுதியேற்படல் கூடாது; கரணியத்தின் (காரணத்தின்) விளைவே கருமியம் (காரியம்) அன்றி, கருமியத்தின் விளைவு கரணியமாகாது. மழையினாற் பயிர் விளையுமேயன்றி, பயிர் விளைவினால் மழை பெய்யாது. ஆகவே, தகுதி முன்னதும் பதவி பின்னதுமாதல் வேண்டும். இதுவே உலகிற்கொத்த உயர்திணை நெறி. ஆயினும், அறியாமையாலும் நடுநிலையின்மையாலும் இந்நெறி புறக்கணிக்கவும் படுகின்றது. அதனாலேயே, சேக்கசுப்பியர்.

'சிலர் பெரியோராகப் பிறக்கின்றனர்; சிலர் பெரியோராக ஆக்கப் படுகின்றனர்; சிலர் மீதோ பெருமை சுமத்தப்படுகின்றது,' என விளம்பினார்.

கீழ்வரும் பத்தியை இறுதியில் இணைத்துக் கொள்க.

"இனிமேல், தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கட் கெல்லாம், பர். மெ. சுந்தரம், பர். அவ்வை சு. நடவரசன், பர். வ. சுப. மாணிக்கம், பர், ச. வே. சுப்பிரமணியம் போன்ற வாய்மைத் தமிழ்ப் புலவரே துணைவேந்தராக அமர்த்தப் பெறல் வேண்டும். வையாபுரிகளான தமிழ்ப்புலவர், முற்றும் தகுதியற்றவராவர். அவர்,

"உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையில்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்."

என்னும் பழமொழிச் செய்யுட்கே எடுத்துக் காட்டாவது திண்ணம். மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக பர். வ. சுப. மாணிக்கம் அமர்த்தப்பெறும் வாய்ப்பின்றிப் போனது வருந்தத் தக்கதே.

தாமரைச்செல்வர், காலமெல்லாம் தமிழ்க்காவலர் என்று பெயர் தாங்கி விட்டு, இன்று இறுதியில் உறுதி கெட்டுத் தமிழைக் கெடுக்கத்

துணிந்தது மிகமிக இரங்கத் தக்கதாகும். இத்தகையோரை நோக்கியே;

"நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலக மாதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்."

என்று 26 நூற்றுண்டுகட்கு முன்பே தொல்காப்பியம் எச்சரித்துள்ளது. "அறுபதிற்குமேற் கிறுகிறுப்பு." என்பர். எழுபதிற்குமேல் குழகுழப்பு, எண்பதிற்குமேற் பண்பிழப்பு என்பதும் சிலர்க்குப் பொருந்தும் போலும்.

மாந்தன் தோன்றிய காலத்திலிருந்து மறையாது வரும் தூய தமிழ்மரபை, தூய தமிழரனைவரும் தாயினும் பெரிது போற்றிக் காக்க. —ஞா. தேவநேயப் பாவாணர்.

சிறுகதையாசிரியர்களுக்கும் கதையார்வமுள்ள
அன்பர்களுக்கும் ஓர் இனிய செய்தி!

தென்மொழி வளர்ச்சித் திட்ட சிறுகதைப் போட்டி

தென்மொழி இதழ் வளர்ச்சிக்கெனவும், தூயதமிழில் கதையெழுதும் திறமையை வளர்க்கும் நோக்கத்துடனும் அடுத்த இதழிலிருந்து, சிறுகதைப் போட்டி ஒன்று தொடங்க இருக்கிறது. இப்போட்டி தென்மொழி அன்பரும், பல கல்வி நிறுவனங்களின் உரிமையாளருமாகிய சிங்கப்பூர், உயர்திரு, திருவாட்டி வெ. ஆவிளங்கண்ணன் (கோபாலகிருட்டிணன்) அவர்களால் தொடங்கப் பெறுகிறது.

முதல் பரிசு உருபா: 300
2-ஆம் பரிசு உருபா: 200
3-ஆம் பரிசு உருபா: 100
விரிவான விளக்கம் அடுத்த இதழில்!

திருத்தம்

இவ்விதழ் 36-ஆம் பக்கத்திற்குப்பின் 37-ஆம் பக்க எண்ணிற்குப் பகரமாக 39 என்றும், அதைத்தொடர்ந்து 8 பக்கங்கட்குத் தவறாகவும் எண்கள் இடப்பெற்றுள்ளன. திருத்திப் படித்துக் கொள்க.

31-ஆம் பக்க மூன்றாம் வரியில் தெண்டு' என்பதைத் 'தொண்டு' என்றும், 36-ஆம் பக்கத்தில் உள்ள சிறுதலைப்பில்' பாண்யன்' என்பதைப் பாண்டியன் என்றும் திருத்திக் கொள்க. —அமைச்சர்

வைத்துள்ளேன். அகப்புற வாழ்க்கையில் உண்மையான தமிழர் பண்பாட்டைக் காப்பற்றிவரும் தாங்கள்தாம் உண்மையான அந்தணராகும். உரத்தநாட்டிலும், தெலுங்கன்குடிக்காட்டிலும் தங்கள் சொற்பொழிவை யான் கேட்டிருக்கின்றேன். தாங்கள் சொற்பொழிவுகள் அனைவரையும் தெளிவடையச் செய்தன. உங்கள் பேச்சில் அமைதியும், உண்மையின் அழுத்தமும், சொல்லின் மெய்யான பலுக்கலும் என்னை மெய்சிலிர்க்க வைத்தன. தங்களின் அமைதி ஒளி படிந்த படம் ஒன்று இயல்பான அளவில் தேவைப்படுகிறது. என்னை செவ்வழிப்படுத்தும் நீர்மை உங்கள் முகத்திற்கு உண்டு. ஆயிரமகவை நீவிர் வாழவேண்டுமென இம்மடலை முடிக்கிறேன்.

—இரா. இலக்குமணன்; பின்னையூர் தஞ்சை. மா.வ.

0:589: பெருமதிப்பிற்குரிய ''தென்மொழி'' ஆசிரியர் அவர்களுக்கு, வணக்கம். தங்களின் 'உலகியல் நூறு' ஒப்பற்ற நூலாகும். இறைமையியலில் கூறப் பட்டிருக்கும்' பல கருத்துகள் எமர்சனின் மேலான்மா (The over-soul) என்ற நூலிலும் இருக்கின்றன. ஆனால் அக்கட்டுரையில் இறைவன் என்று கூறாது மேலான்மா என்றே குறிப்பிடுகின்றார். ஐந்து பாக்களில் எமர்சனின் பெருங்கட்டுரையான மேலான்மாவை அடக்கி இத்தமிழகம் உய்யத்தந்த தங்களுக்கு நன்றிக் கடனுற்ற இத்தமிழகம் கடமைப்பட்டுள்ளது.

—சி. நா. செந்தமிழ்ச்செல்வன் தியாக துருக்கம்.

0:590: உண்மைத் தமிழர்க்கு ஒளிவிளக்காகத் திகழும் உயர்புகழ் தலைவர்க்கு வணக்கம். தாய்மொழியாம் தமிழை யழிக்கப் பேய்மொழியாம் இந்தியினை மெல்ல மெல்ல நடுவண் அரசு திணித்து வருவதைத் தமிழின்மேல் அக்கறையுடைய அரசியலாரும், தமிழறிஞர்களும் கண்டனக் குரல்கொடுத்துக் கண்டிக்கின்றனர். இன்றைய சனதா அரசு இந்தித் திணிப்பில் வாயளவில் ஒன்றும், செயலளவில் வேறொன்றுமாகச் செய்து வருவது தமிழகத்தில் மீண்டும் 'இந்தி எதிர்ப்புப் போர்'' தொடங்கக் கூடிய நிலையினை ஏற்படுத்தும்; தென்மொழிப் பாவலரே! தனித்தமிழ்த் தலைவரே! தாங்கள் ஆணையிட்டால் என்போலும் தமிழ் இளைஞர்கள் இந்தி எதிர்ப்புப் போரில் களம்புகக் காத்திருக்கிறோம்!

—'தென்மொழித்தம்பி' அருள் இறைவோன் க.இ., முகவை.

0:591: மறைமலையின் வழித்தோன்றல்- மணித்தமிழாம் தனித்தமிழின் காவலன்- பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். கடந்த இரண்டு மூன்று திங்களாக வெளிவரும் தென்மொழி இதழ், மொழித்தூய்மை பற்றிக் கவல்வுறாது எழுத்துலகில் திரியும் அரைவேக்காட்டுப் பேர்வழிகளுக்குத் தகுந்த அறிவூட்டுவதாக அமைந்து வருதல் குறித்துப் பெருமகிழ் வெய்துகிறேன்.

''மொழியைமட்டும் பேணினால், குமுகாய நலனை யார் பேணுவது -வாடும் வயிறுகளை அதனால் நிரப்பிவிட முடியுமா?'' என்றெல்லாம் என் கெழுதகை நண்பர்களான பொதுவுடைமையாளர்கள் அடிக்கடி கேட்பதுண்டு. மொழி என்பது கருத்தை வெளியிடும் ஒரு கருவிதானே அதற்குப்போய் இவ்வளவு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டியதில்லை' என்றெல்லாம் பேசுவார் உண்டு. ''உன் கருத்தை வெளியிடும் கருவி தூய்மையாக இருக்க வேண்டாமா? மொழியைப் பேணும் நாங்கள் மக்களையும் குமுகாயத்தையும் மறந்தவிட்டதாக யார் சொன்னது? ஏதோ மக்கள்-அவர்கள்தம் இயலாமை-வறுமை முதலியன பற்றி இப்பரந்த உலகிலே நீங்கள் (பொதுவுடமையர்) மட்டும் அக்கறை காட்டுவதுபோல் பேசுவது எற்றுக்கு''— என்றெல்லாம் நான் கூறி வருவதுண்டு. அத்தகு நண்பர்க்கெல்லாம் விடையிறுப்பதாக அமைந்த 'மார்க்சும்- மறைமலையாரும்' என்ற திரு புலவர். தி.நா. அறிவுஒளி; க.மு அவர்களின் கட்டுரையை மிகவும் பாராட்டுகிறேன்,

எப்படியாவது கருத்தை வெளியிடுவது- அந்தக் கருவிக்குத் தூய்மை வேண்டியதுதானா என்று வினவும் எம் நண்பர்களே, தென்மொழி உறவுகளாகிய நாங்கள் உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறோம். நாங்கள். உணவால் மட்டும் வாழவில்லை; உணர்வாலும் வாழ்கிறோம். —சோ. முத்துமாணிக்கம். பழனி.

0:592; பேரன்புடையீர். வணக்கம் நலம் நலமே மலர்க. தாங்கள் அனுப்பிய தென்மொழி கிடைக்கப் பெற்றேன். இதனைப் பலர் படித்துப் பாராட்டுகின்றனர். தமிழனுக்கு இன,மொழி வழியாக ஒருநாடு அமைந்திட வேண்டுமென்பதை உலகுவாழ் தமிழர்களிடையே உணர்த்தி, உரிமைத் தமிழகம் அமைந்திட அயராது பாடு பட்டுவரும் தங்களின் பணி காலக்குறிப்பு ஏடுகளில் இடம்பெறப் போவது உறுதி. வாழ்க தமிழினம்! வளர்க உலகத் தமிழர் ஒற்றுமை!
—கே. எம். குணசேகரன். இரங்கூன், பர்மா.

0:593: தமிழ் நலஞ்சான்ற ஐயா, வணக்கம். வாழி பல்லூழி, "சென்னையில் தங்கள் இல்லில் சந்தித்தபொழுது 'தென்மொழி' நிலையை நேரிற்கண்டேன். புன்மைத் திரைப்பட மாயையிலும், போலி நாகரிக மயக்கிலும், மேலை நாட்டுக் கலப்பட வாழ்வியல் போக்கிலும் கீழ்மை அரசியல் ஆரப்பரிப்புகளிலும், மடமைப் பிடியிலும அடிமைக் கெடு பிடியிலும் சிக்கிச் சீரழிந்துவரும் இற்றைக் குமுகாயத்தை எண்ணிக் கண்ணீர் வடித்தேன். வீழ்ந்துகிடக்கும் தமிழனைத் தூக்கி நிறுத்தித் தொல்புகழ் உணர்வை ஏற்றத் துடியாய்த் துடிககிறீர்கள்! அந்தத் துடிப்புக்குரல் ஊமையன் காதில் விழ்ந்து பயனற்றுப்போகும் சங்கொலியாகத்தான் இருக்கிறது; என்செய்வது? இனி இவனை மேலேற்ற தென்மொழி ஒன்று மட்டும் போதாது என்பதை உணர்ந்தேன். ஒருபுறம் ஒளியூட்டும்போது அதன் மறுபுறம் இருள் அன்றோ சூழ்ந்து கொண்டு வருகிறது. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. இன்றில்லாவிடினும் என்றேனும் தமிழன் விழிப்புறுவான்; அன்று தாங்கள் யார்? தங்கள் தொண்டு எப்படிப்பட்டது என உணர்வான். அதுவரை இயன்றுங்கு முயன்று எடுத்த பணியில்— குறிக்கோளில் துவளாது நடைபோடுங்கள். வெற்றி வரும்; விரும்பும் நலந்தரும்; கவல வேண்டா"
—புலவர். நாரை. சிவம், மணப்பாறை. திருச்சி.

0:594: பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம். முதல்வர் மதுரைப் பல்கலைக் கழகத்திற்குக் காமராசர் பெயர் இடப் படும் என்று அறிவித்திருக்கிறார். காமராசர் பெயரை ஒரு பல்கலைக் கழகத்திற்கு வைப்பதை வரவேற்கும் அதே நேரத்தில், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு யார் பெயரையும் இடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம். மதுரை தமிழ் வளர்த்த நகர். மதுரை என்றாலே நினைவுக்கு வருவது தமிழ்தான். மூன்று தமிழ்க் கழகங்களில் கடைக் கழகம் இருந்தது மதுரையில தான். தமிழுக்கென்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் அமைத்திட முனைப்போடு முன்வராத நிலையில், தொன்மையானதும் வரலாற்றுப் புகழ் பெற்றதுமான மதுரை என்ற தமிழ்ச் சொல்லாவது ஒரு பல்கலைக் கழகத்திற்கு இருக்கிறது என்ற எம் ஆறுதலில் மண்ணைப் போடவேண்டாம் என்று முதல்வரைக் கேட்டுக் கொள்கிறோம். காமராசர் பெயரைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கோ அல்லது திருச்சி. கோவை போன்ற நகரங்களில் நிறுவப்படுவதாக இருக்கும் பல்கலைக் கழகங்களில் ஒன்றுக்கோ இடலாம்.
—நலங்கிள்ளி, நண்பர்கள்; சித்த(நாயக்க)ன் பாளையம். கோவை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).